
கோகுலம்

22-10-1978 விலை 60 காசு




ராஜுவின் இரகசியம்




அடா, ராஜு மறுபடியும் பஸ்ட்! அவன் எப்படி எப்போதும் பஸ்ட் வர்ரான்? உபாத்தியாயர் அவனுக்கு ரொம்ப சலுகை காட்டுகிறார்.

எல்லோரும் அவனுடைய மேஜையைப் பார்ப்போம் வாங்கடா.



இதோ அவனுடைய ஜாமெட்ரி புத்தகத்தைப் பார்த்தீங்களா, ட்ராயிங் எவ்வளவு கச்சிதமா, கொஞ்சங்கூட தப்பில்லாம இருக்கு!



அவனுடைய விஞ்ஞானப் புத்தகத்தைப் பாரு. ஆஹா, எவ்வளவு அழகான படங்கள். அதனால்தான், உபாத்தியாயர், ''பிரமாதம், தொடர்ந்து புத்திசாலியா படி'' என்று எழுதி இருக்கிறார்.

அப்படியே வச்சிட்டு சீக்கிரமா வாங்க, ராஜு வர்ரான்.




என்ன? ஏதாவது தேடறீங்களா?

ஆமாம் ராஜு, உன்னுடைய இரகசியத்தை, நீ எப்போதும் எப்படி இவ்வளவு அழகா, கச்சிதமா எழுதறே.



அதுவா, ரொம்ப சாதாரணம். என்னுடைய கேமல் இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பாக்ஸ்தான் என் வெற்றியின் இரகசியம். அது அவ்வளவு நுட்பமாகவும் கச்சிதமாகவும் எழுதுகிறது. இது வரை நான் உபயோகித்ததிலே அதுதான் பெஸ்ட்.




அப்படியா? எங்கம்மாவை இப்பவே அதை வாங்கச் சொல்றேன்.

நான்கூடத்தான்.

ராஜுவின் வெற்றியின் இரகசியம்,
உங்கள் வெற்றியின் இரகசியம்
இன்றே வாங்குங்கள்

கேமல்

இன்ஸ்ட்ருமென்ட்ஸ் பாக்ஸ்



கேமலின் பிரைவேட் லிமிடெட்
[illegible]
ஜெ.பி. நகர்,
பம்பாய் 400 059 (இந்தியா)

கேமல் வாட்டர் கலர் பெயின்ட்களைக் கொண்டு கொள்ளுங்கள், கேமலின் கலர் பெயின்டிங் மற்றும் கார்ட்டூனில் கற்பனைப்போட்டி வகுப்புகளில் சேருங்கள். மேற்கண்ட முகவரியில் விசாரியுங்கள்.

Vision 768 Tam.

மலர் - 6 இதழ் - 16

அக்டோபர் 22, 1978

காளயுக்தி - ஐப்பசி 5



உயிர்களிடத்து அன்பு
வேண்டும் - தெய்வம்
உண்மையென்று தானறிதல்
வேண்டும் — பாரதியார்

கோகுலம்

சந்தா விவரம் :

இந்தியா :

ஒரு வருடம் — ஆறு மா

ரூ. 15-00 — ரூ. 7-

வெளி நாடுகள்:

ஒரு வருடம் ரூ. 40-0

அருமைக் குழந்தைகளே!

உங்களோடு மனம் விட்டுப் பேச வேண்டிய விஷயம் ஒன்றிருக்கிறது. இப்போது நாங்கள் சொல்லப் போவதைக் கேட்டு நீங்கள் அதிர்ச்சியடையலாம். ஆனால் நம்பிக்கை இழக்கக் கூடாது.

கோகுலம் தன்னுடைய ஆறுவது ஆண்டில் அடி எடுத்து வைத்த போது — கடந்த ஆண்டு — எதிர்பாராத விதமாக ஒரு தடங்கல் ஏற்பட்டது. ஆலமரமெனப் பரந்து, விரிந்து தழைத்திருந்த பரதன் பப்ளிகேஷன்ஸ் என்ற ஸ்தாபனத்தையும் அதன் ஸ்தாபகர்களையும் அது ஓர் உலுக்கு உலுக்கி விட்டது. உங்களுடன் குலவி மகிழ முடியாமல் ஓராண்டு காலம் அக்ஞாத வாசம் புரியவும் நேரிட்டது. கெட்ட கனவு போல அதை மறந்து, உங்கள் ஏக்கங்களைப் போக்க மறுபடியும் எங்கள் சக்தியையெல்லாம் திரட்டிக் கொண்டு புது வாழ்வை நோக்கிச் சிலிர்த்து எழுந்தோம். புனர் ஜென்மம் எடுத்த கோகுலத்தின் தோற்றம் கண்டு தமிழ் கூறும் நல்லுலகம் மனம் மகிழ்ந்தது; உள்ளம் நெகிழ்ந்தது. வளரும் பயிர்களுக்கு உரம்போல, அறிவு வளர்க்கும் கோகுலத்தைத் தொடர்ந்து உங்களுக்கு விருந்தாக்கி வைக்கலாம் என்று மகிழ்ந்திருந்தோம். ஆனால்...

உங்கள் கோகுலத்துக்கு மறுபடியும் சோதனைகள் தோன்றியுள்ளன. புது வாழ்வு தொடங்கியுள்ள இந்த நிலையில் முன்பிருந்த வசதிகள் இல்லை. பத்திரிகையின் முதல் தேவையான காகித வசதியும் இல்லை.

ஆரம்பத்திலிருந்தே லாபத்தைக் கருதிக் கோகுலத்தை வெளியிடவில்லை. குழந்தைகளாகிய உங்களுக்குப் பலன் கருதாது செய்யும் ஒரு சேவையாகவே எண்ணி இதை வெளியிட்டு வந்தோம். ஆனால் எத்தனை காலம் சிரமங்களைத் தாங்க முடியும்? இந்த இதழோடு உங்களிடமிருந்து விடை பெறுகிறது கோகுலம். இதைப் படிக்கும் போது கண்ணீர் உங்கள் பார்வையை மறைப்பதையும் துக்கம் நெஞ்சை அடைப்பதையும் எங்களால் உணர முடிகிறது.


இது பிரியா விடை....

உங்கள் அன்பும் ஆதரவும் நல்லெண்ணமும் பிரார்த்தனையும் விரைவில் நாம் மீண்டும் சந்திக்கும் சாத்தியக் கூறுகளை ஏற்படுத்தக் கூடும். ஆனாலும் இப்போதைக்கு, கனத்த இதயத்துடன் இருகரம் குவித்து விடை பெறுகிறோம்.

ஆசிரியர்.

மூளைக்கு வேலை

மேலே ஆரம்பித்து கீழே போய் முடிக்கவேண்டும். கோட்டின்மீது வெட்டிச் செல்லக்கூடாது. உங்கள் பென்சில் முனை வழி, கால்வாய்ப் பாதை வழியே கச்சிதமாக வழிதேடி வந்து சேரவேண்டும்.





நல்வழி

கடிவது மற:

ஒவ்வொரு மனிதனுடைய வாழ்விலும் சிலவற்றைச் செய்ய வேண்டும் சிலவற்றைச் செய்யக் கூடாது என்று அறநூல்களில் சொல்லப் பட்டிருக்கிறது. அவைகளுள் செய்ய வேண்டியவைகள்; — சூரிய உதயத்திற்கு முன்பு தூக்கத்திலிருந்து விழித்து எழுந்திருக்க வேண்டும் — இரண்டு உள்ளங்கைகளையும் உரசிப் பார்க்க வேண்டும் - - இறைவனை மனதில் நினைக்க வேண்டும். இன்றையப் பொழுது நல்ல பொழுதாக அமைய வேண்டுமென்று பிரார்த்தனை செய்ய வேண்டும் - முகம் — கைகால்களைக் கழுவிக் கொள்ள வேண்டும். - குளிர்ந்த நீரில் நீராட வேண்டும் - கந்தலானாலும் கசக்கிக் கட்ட வேண்டும் - நெற்றியில் விபூதியோ - திருமண்ணோ - பொட்டோ இட்டுக் கொள்ள வேண்டும் - நல்ல குணத்தை அளிக்கக் கூடிய சாத்வீக உணவை இறைவனுக்குப் படைக்க வேண்டும் - அப்படி இறைவனுக்குப் படைக்கப் பட்டபின் அந்த உணவை உண்ண வேண்டும். ஆபத்துக் காலத்திலும் கஷ்ட காலத்திலும் உதவக் கூடிய நல்ல நண்பர்களுடன் சேர வேண்டும் - தனக்கு ஏற்பட்ட பணிகளைச் சரியான முறையில் செய்ய வேண்டும் — மாலையில் கைகால்களைக் கழுவிக் கொண்டு இறைவனைத் தொழ வேண்டும் — படுக்கும் முன் இறைவனை நினைத்துக் கொண்டு தூங்க வேண்டும். இது போன்றவைகள் பொதுவாக மனிதனுக்கு விதிக்கப் பட்டவை!

செய்யக் கூடாதவைகள்: சோம்பலாய் எழுந்திருக்கக் கூடாது — எழுந்தவுடன் கவலை போன்றவைகளுக்கு இடம் கொடுக்கக் கூடாது - சுத்தமான காரியத்திற்கு பழைய ஜலத்தை உபயோகப் படுத்தக் கூடாது - துன்பத்தைத் தரக்கூடிய எந்தக் காரியத்தையும் செய்யக் கூடாது - உணவு தயாரித்துக் கொண்டிருக்கையில், அதைச் சாப்பிடக் கூடாது - பிறர் கடிந்து சொன்ன சொல்லை நினைவில் வைத்துக் கொள்ளக் கூடாது - நாமும் பிறரைக் கடிந்து சொல்லக் கூடாது - மனதைக் குழப்பும் காரியங்களைச் செய்யக்கூடாது — தீயதைச் சொல்லக் கூடிய நூல்களைப் படிக்கக் கூடாது — இது போன்று அறநூல்களில் விலக்கியவைகளை மறந்து விட வேண்டும் — இதுதான் 'கடிவது மற' என்பதற்குப் பொருள். அதாவது அறநூல்களில் விலக்கியவற்றை — கடியவைகளை மறந்துவிட வேண்டும்.

ஜகத்குரு ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடாதிபதி ஜயேந்திர சரஸ்வதி சுவாமிகள்





சிவகாசி பட்டாசுகள்

என்.ராமகிருஷ்ணு


தீபாவளி என்றதுமே நம் கண் முன் நிற்பது பட்டாசுகளும், மத்தாப்பும். இவைகளைக் கோடிக் கணக்கில் உற்பத்தி செய்யுமிடம் தமிழ் நாட்டில் உள்ள சிவகாசி என்னும் சிற்றூர். ராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள இந்த ஊரில் சுமார் 150 வகையான பட்டாசுகளும், மத்தாப்புக்களும் உற்பத்தி செய்கின்றனர். ஆயிரக் கணக்கான ஆண் பெண் தொழிலாளர் இதில் பங்கு கொள்கின்றனர். மருந்து அடைக்கும் வேலை தவிர மற்ற எல்லா வேலைகளும் பெண்களால் செய்யப் படுகின்றன.


இவைகளுக்குத் தேவையான அட்டைக் குழாய்கள் மற்றும் அட்டைப் பெட்டிகளை வீடுகளிலேயே தயார் செய்கிறார்கள். இதை ஒரு குடிசைத் தொழில் என்றும் கூறலாம்.


பட்டாசு செய்யும் தொழிற் பேட்டை ஊருக்கு வெளியில் அமைந்துள்ளது. பல விதமான பட்டாசுகளுக்குத் தக்கபட்டி கட்டிடங்கள் அமைக்கப்பட்டுள்ளன. அபாயகரமான மருந்து வகைகளை ஆண்கள் கையாளுவர். மற்றவை பெண்கள் வேலை.

மேலே: 1. குச்சி மத்தாப்பு செய்தல், பிரேம்களில் குச்சிகளைச் செருகுதல் 2. ஃபியூஸ் திரிகளைத் துடையில் திரித்தல்.

கீழே: 3. 'டாட் பிரிண்டிங்' முறையில் கேப்புகள் வெளி வருகின்றன. 4. கேப்புகள் ஒட்டிய தாள்களைப் பஞ்சு மெத்தை மூலம் பிரஸ் செய்கிறார்கள்.









பட்டாசு: பண்டிகைக்கு அதிகமாக விலைபோகிறவை பட்டாசும் மத்தாப்பும் தான். மற்றும் கம்பி மத்தாப்பு, குச்சி மத்தாப்பு, பென்சில், சாட்டை, விஷ்ணு சக்கரம், தரைச் சக்கரம் முதலியனவும் செய்யப் படுகின்றன.

பட்டாசு எப்படிச் செய்கிறார்கள் என்று நோக்குவோம். நீண்ட அட்டைக் குழாய்களில் மருந்துகளை நிரப்பி, அவைகளை வேண்டிய நீளத்திற்கு வெட்டுவார்கள். ஒரு பக்கத்தை மண் கொண்டு அடைத்து விடுவார்கள். மற்றொரு பக்கத்தில் ஃப்யூஸ் என்ற திரியை பொருத்துவார்கள். வெளிப் பக்கம் வண்ணக் காகிதத்தை ஒட்டி விடுவார்கள். பட்டாசுகளுக்குச் சிவப்புக் காகிதம் வெகுவாக உபயோகிக்கப் படுகின்றது. பின்பு ஒத்தைப் பட்டாசுகளைச் சேர்த்துக் கட்டாகப் பின்னிவிடுவார்கள். இதற்கு உபகரணங்கள் உண்டு.

கம்பி மத்தாப்பு: கம்பி மத்தாப்பு செய்ய, செப்புக் கம்பிகளை வேண்டிய அளவில் வெட்டிக் கொள்வார்கள். அவைகளை ஃபிரேம்களில் பொருத்தி விடுவார்கள். இதற்காக விசேஷ ஃபிரேம்கள் உள்ளன. அவை கம்பிகள் கீழே விழாமல் பாதுகாக்கும்.

இந்த ஃபிரேமை ஓர் இரசாயனக் குழம்பில் முக்குவார்கள். இந்தக் குழம்பு தண்ணீராக இல்லாமலும், கெட்டியாக இல்லாமலும், தேன் போல் இருக்கும். இக்குழம்பு கம்பிகளில் ஒட்டிக் கொள்ளும். பின்பு இந்த ஃபிரேம்களை வெய்யிலில் உலர்த்துவார்கள். நன்றாக உலர்ந்ததும் பெட்டிகளில் அடைப்பார்கள்.


கேப்பு: பொம்மைத் துப்பாக்கிகளுக்கு என்று கேப்புகள் செய்கின்றார்கள். இது மிகவும் அபாயகரமான வேலையாதலால் இதற்கென்று தனிக் கட்டிடங்கள் உள்ளன. இதற்கான உபகரணங்களும் உள்ளன. சிறிய அளவில் மெத்தைகள் தைத்து வைத்துள்ளார்கள். இந்த வேலை செய்யும் இயந்திரத்தின் பெயர் — டாட் பிரிண்டிங் மிஷின். விசேஷமான தோர் சிவப்புக்காகிதத்தின் மேல் ரசாயன மருந்தைப் புள்ளி புள்ளி

மேலே: 1. விஷ்ணு சக்கரம் பிரேம்களில் அடைக்கப்பட்டுள்ளன. 2. தரைச்சக்கரத்துக்குப் பொத்தான் பொருத்துதல்.

கீழே: 3. கேப் வெடிக்கான பெட்டிகள் உருவாகின்றன. 4. கேப் பெட்டிகளைப் பாக் செய்கிறார்கள்.







கம்பி மத்தாப்புகள் வெயிலில் உலருகின்றன.

யாக இந்த மிஷின் அச்சிடும். இதற்கு மேல் மற்றொரு சிவப்புக் காகிதத்தை ஒட்டுவார்கள். அதனால் ஒவ்வொரு புள்ளியும் தனித்தனியாகக் காகிதங்களின் நடுவே சிக்கி விடும். மிக நுட்பமாக வேலை செய்ய வேண்டும். சிறிய உரசல் ஏற்பட்டாலும் நெருப்புப் பற்றி விடும். பின்பு இவைகளை மற்றொரு இயந்திரத்தில் கொடுத்து வில்லை வில்லையாகக் கத்தரித்து விடுவார்கள். உபயோகமற்றவைகளைத் தண்ணீரில் போட்டு விடுவார்கள். அழகான பெட்டிகளை மற்றொரு இயந்திரம் தயார் செய்யும். இந்தப் பெட்டிகளில் கேப்புகளை அடைத்து அனுப்புவார்கள்.

சக்கரம்: விஷ்ணு சக்கரம் செய்வதற்குத் தேவையானவை நீண்டகுழாய்கள். இவைகளில் மருந்தை நிரப்பி, வட்டமாகச் சுற்றி அதற்காகச் செய்யப்பட்ட ஃபிரேம்களில் இட்டு நிரப்புவார்கள். இதன்மேல் ஓர் மரக்குழவி கொண்டு உருட்டுவார்கள். எல்லா வட்டங்களும் சீராக அமையும். தனித்தனியாக இருக்கும்.

பின்பு நீண்ட கம்பிகளில் இவைகளைப் பொருத்துவார்கள். இந்தக் கம்பி ஒரு பக்கம் வளைக்கப் படும். சக்கரங்கள் கழன்டு விடாமல் ஓர் சிறிய தடையும் அமைக்கப்படும். நெருப்புப் பற்றிய உடன் சக்கரம் சுழலும். ஆனால் கழன்று வெளியே வராது.

தரைச் சக்கரமும் இம்மாதிரி தான் செய்யப் படுகின்றது. கம்பிக்குப் பதிலாகத்தரையில் சுற்ற ஒரு பித்தானை அட்டையால் செய்து ஒட்டிவிடுவார்கள். அதுதரையில் வேகமாகச் சுழலும்.

ஃபியூஸ்: பட்டாசுகள் வெடிப்பதற்கு மிகவும் முக்கியமான சாதனம் ஃப்யூஸ். இதை மிகவும் கவனமாகச் செய்ய வேண்டும். இந்த ஃபியூஸ் மூலமாகத் தான் நெருப்பு சீராக பட்டாசுக்குள் செல்லும். நீண்டநூல் தயார் செய்து அதை ரசாயனக் கலவை கொண்ட திரவத்தில் மூக்கி எடுத்துக் காய வைப்பார்கள். இதற்கு மேல் வண்ணக் காகிதம் திரித்து ஒட்டப்படும். பெண்கள் இந்த ஃபியூஸ் நூலை தொடைகளில் இட்டுத் திரித்துக் கனமுள்ளதாகச் செய்வார்கள். ஆண்களால் இதைச் செய்ய முடியாது.

இம்மாதிரி பல விதமான பட்டாசுகளும் மத்தாப்புகளும் செய்யப் படுகின்றன. கலர் மத்தாப்புகளை குச்சிகள் கொண்டு நெருப்பு பெட்டி போல் செய்வார்கள். சில ரசாயனங்கள் எரியும் போது வண்ண ஜாலங்களைப் பிரதி பலிக்கும். மத்தாப்பு தயாரிக்கவும் ஃபிரேம்கள் உண்டு.

முக்கியமாக உபயோகிக்கப்படும் ரசாயனங்கள் குளோரைட், அலுமினியம், வெடி உப்பு, துப்பாக்கிமருந்துப் பவுடர் முதலியன. இதற்கென்று தனி ரசாயனச் சோதனைச் சாலையும், ரசாயன வல்லுநர்களும் உண்டு. ஒவ்வொரு மருந்தும் சரி பார்க்கப் பட்ட பின்பே தொழிற் சாலைகளுக்கு அனுப்பப் படுகின்றன.


பெட்டிகள்: இந்தப் பட்டாசுகளை எல்லாம் போட்டு அனுப்ப அட்டைப் பெட்டிகள் வேண்டுமல்லவா? அதை வீடுகளில் பெண்களே செய்கின்றனர்.

அட்டைகளைத் தக்கபடி வெட்டி வண்ண லேபில்களுடன் வீட்டுக்கு வீடு கொடுத்து விடுகின்றார்கள். பெண்கள் ஓழிந்த வேளைகளில் அவைகளை மடித்து ஒட்டி மாலையில் கொடுத்து விடுகின்றார்கள். சாதாரணமாக ஒரு பெண் இரண்டு மூன்று ரூபாய் சம்பாதிக்கலாம். வீட்டில் நாலைந்து பெண்கள் இருந்தால் சுலபமாகப் பத்து ரூபாய் சம்பாதிக்கலாம்.

தொழிற்சாலைகள் நல்ல வெய்யில் காலத்திலேயே வேலை செய்கின்றன. மழைக் காலம் இவர்களுக்கு விரோதி. அதனால் வருடத்தில் எட்டு அல்லது ஒன்பது மாதம் இந்தத் தொழிற்சாலைகள் சுறுசுறுப்பாக வேலை செய்யும்.

இந்தியப் பட்டாசுகள் வெளி நாடுகளுக்கும் ஏற்றுமதி செய்யப் படுகின்றன. அமெரிக்க நாடு தன்னுடைய இருநூற்றாண்டு விழாவில் சிவகாசி பட்டாசுகளைக் கொளுத்தி மகிழ்ந்தது. சீனாவில் செய்யப்பட்டு சீனவெடி என்று பெயர் பெற்றிருந்த இந்தப் பட்டாசு இப்போது சிவகாசி வெடி என்ற பெயரை உலகம் முழுவதும் நிலைநாட்டியுள்ளது.

போட்டோக்கள்: கட்டுரை ஆசிரியர் எடுத்தவை





அப்பாவை மிஞ்சியவர்; உலகிலேயே உயரமானவர்

மனசை ப. சிதம்பரம்

சுவாமிமலை சாமிநாதனைப் போல அப்பாவை மிஞ்சிய இன்னொருவரைப் பற்றிய கதையை உங்களுக்குச் சொல்லப் போகிறேன்.

நம்முடைய ஹிந்து மதத்தைப்போல ஜீவகாருண்யத்தைப் போதிக்கிற மதம் ஜைனமதம். அதை மகாவீரர் பரப்பினார். அவரும் அவரோடு சேர்த்து இருபத்தி நான்கு தீர்த்தங்கரர்கள் தோன்றினார்கள். முதல் தீர்த்தங்கரர் ஆதிநாதர். அவரோட மகன் கோமதீஸ்வரன். இவன் ஜீவகாருண்யத்தைக் கடைப்பிடித்தான். இவன் அமைதியைப் போதித்தான். இவன் சர்வமத சமரசத்தைப் பரப்பினான். பனிரண்டு வருடம் நின்றபடியே, கடவுளை வேண்டித் தவமிருந்தான். அப்பா ஆதிநாதரும் கூட இவற்றைச் செய்தார். என்றாலும் அப்பாவை மிஞ்சி விட்டான், இந்த கோமதீஸ்வரன் என்ற இருபத்தைந்து வயதான இளைஞன். ஆம். பூர்ணத்வம் பெற்று, இறவா நிலை அடைந்து கடவுளை அடைந்தான்.

கோமதீஸ்வரனை, இப்போது நாம் கோமதீஸ்வரர் என்று வணங்குகிறோம். மதித்து வழிபடுகிறோம்!

இவரது புகழ், சூரியனின் ஒளி போலப் பரவி விட்டது. மாவீரன் சந்திர குப்த மௌரியன், கர்னாடகா மாநிலத்தில் இப்போதுள்ள சரவண பலகுலா என்னுமிடத்தில் பாறையின் மேல் உட்கார்ந்து, தனது கடைசி காலத்தைத் தவமிருந்து கழித்ததாக வரலாறு கூறும். பிறகு புகழ் பெற்ற கங்கை நதி நீர மன்னர் ரச்மாலாவின் பார்வை இங்கே விழுந்தது. அவர் தனது ராணுவ தளபதி சாமுண்டராயனை அனுப்பி, கோமதீஸ்வரரைக் கௌரவிக்கலானார்.

சாமுண்டராயனும் சிற்பி அரிஸ்டனமியும் கைகோர்த்து, இருகண்களை ராப்பகலாகப் பாடுபட்டு, சரவணபலகுலாவில் ஒரு பெரிய மலைக் குன்றைச் செதுக்கி, கோமதீஸ்வரர் உயிரோடு நிற்பதுபோல சிலையாக அற்புதமாகச் வடித்து விட்டார்கள்.

ஐம்பத்தேழு அடி உயரச் சிலை. ஒரே கல். தாமரைப் புஷ்பம். மலர்க் கொடி வளர்ந்து, கோமதீசரின் கால்களையும் கைகளையும் சுற்றிக் கிடக்கிறது. அவருக்குப் பக்கத்தில் பாம்புப் புற்று. சீறும் பாம்புகளுக்குகோ குறைவில்லை. ஆனால், கோமதீஸ்வரர் அசையாமல், கடவுளை வேண்டி, புன் முறுவலோடு, நிற்கிறார். இவ்வளவையும் ஒரே கல்லில் சிலையாகக் காண்கிறோம்.

அவர் உதடுகளில் நெளியும் சிரிப்பையும் கண்களில் உள்ள அமைதியையும் கால்—கைகளின் நகங்கள் அமைந்துள்ள அழகையும் காணும் போது, சிலையை வடித்த சிற்பியின் திறமையையும் கை வண்ணத்தையும் கண்டு வியப்படைகிறோம்.

சிலையின் தலைமயிர் சுருள்கள் மூன்றரை அங்குலம் நீளம் முதல் ஆறு அங்குலம் வரை அற்புதமாக உள்ளன. தொப்புளுக்குக் கீழ் சுருக்கக் கோடுகள் மூன்று இருக்கின்றன.

இதையெல்லாம் படிக்கப்படிக்க இப்போதே போய்க் காணவேண்டும் போலிருக்கிறதல்லவா?

இன்னமும் அதிசயம் இருக்கிறது. 1951லே பண்டித ஜவஹர்லால் நேரு தேர்தல் சுற்றுப் பயணத்தின் போது பத்து நிமிடம் ஒதுக்கிக் கொண்டு மகள் திருமதி இந்திரா காந்தியோடு கோமதீஸ்வரர் சிலையைக் காண இங்கு வந்தார்.

ஒருமணி நேரம் பார்த்துக் கொண்டேயிருந்தனர் அப்பாவும் மகளும். குருக்கள் காந்தராஜுவிடம் விபரங்களைக் கேட்டறிந்தார், நேரு.

''எங்கும் கிடைக்காத நிம்மதி, கோமதீஸ்வரர் சிலையைக் கண்டபோது எனக்கு ஏற்பட்டது. மறுமுறை இவர் விரும்பினால் வருவேன்'' என்று வணங்கியவாறே சொன்னதாக காந்தராஜ் பெரியவர் சொல்கிறார்!

ஆயிரம் வருடமானாலும் இன்று செய்தது போலவே சிலை, இருக்கிறது.

இந்திய அரசாங்கத்தின் தொல்பொருள் பாதுகாப்பு இலாகா, சிலை கெடாமலிருக்க ரசாயனக் கலவை பூசி உதவுகிறது.

பனிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை மகா கும்பாபிஷேகம் என்னும் வைபவம் நடக்கும். அப்போது லட்சோப லட்சம் மக்கள் பால், தேன், நெய் ஆகியவற்றைக் குடம் குடமாக கோமதீஸ்வரர் மீது அபிஷேகம் செய்வார்கள். கர்நாடக மாநிலத்தின் அரசாங்கத்துக்குச் சொந்தமான ஹெலிகாப்டர் சிலை மீது பூச்சொரிவதைக் காணலாம்.

1981ல் நடக்கப் போகும் ஆயிரம் ஆண்டு மகா கும்பாபிஷேகத்திற்கான ஏற்பாடுகள் இப்போதே முடுக்கி விடப்பட்டுள்ளது.

இந்தியாவை வாள் முனையில் ஆண்ட சந்திர குப்த மௌரியனைக் கவர்ந்த இடம் சிரவணபல குலா.

'அப்படியென்றால் என்ன அர்த்தம்?' 'ஜைனர்களின் வெள்ளைமலை' என்று பொருள். வெட்ட வெளியில் வெயிலில் காய்ந்தும் மழையில் நனைந்தும் கூடப் புன் முறுவலுடன் மக்களுக்கு அருள் பாலிக்கும் கோமதீஸ்வரரை, வணங்கி வழிபட்டால் துன்பம் — இன்பம் இரண்டையும் சகித்துக் கொண்டு முன்னேறும் உத்வேகம் உங்களுக்கு சித்திக்கும்.

இருபத்தைந்து வயது இளைஞன், பனிரண்டு ஆண்டு தவமிருந்து முக்தியடையும் போது எப்படி இருப்பான் என்பதை சிரவணபல குலா கோமதீஸ்வரர் சிலை அற்புதமாகக் காட்டுகிறது.

சிரவணபல குலாவை எப்படி அடைவது? மைசூர் ஹாசன் இரயில் பாதையில் மண்டிகிரில் இறங்கி சென்னராய பட்டினம் போய், அங்கிருந்து பெங்களூர் சாலையில் அரைகல் சென்று, திரும்பி ஏழுகல் போனால் போதும். அல்லது, அதே ரயில் பாதையில் ஹோஸே நரசிபூரில் இறங்கி, சென்னராய பட்டினம் போய் அங்கிருந்தும் போகலாம். இல்லையென்றால் ஹாஸனில் இறங்கி, நேரே பஸ்ஸில் சென்னராய பட்டினம் வழியாகப் போகலாம்! ஹாஸனிலிருந்து ஏராளமான பஸ்கள் உண்டு.

சிரவண பலகுலாவில், தொங்கும் கல் உண்டு. தர்மம் செய்யும் மண்டபம் உண்டு. புண்ணிய தீர்த்தம் உண்டு. சந்திர குப்த மௌரியரின் குரு பத்ரபாஹுவின் சிலை உண்டு. அவர் இங்கிருந்து தவம் செய்கையில் மாவீரன் சந்திர குப்தர் உடனிருந்து சேவை செய்து, தானும் முக்தியடைந்ததாக வழிகாட்டிகள் சொல்வார்கள்.

ஓர் விடுமுறையின் போது சிரவணபல குலாவிற்கு அவசியம் சென்றுவாருங்கள்.

பழக்கத்தின் வலிமை

ஸர் வால்டர் ஸ்காட், பள்ளியில் பயின்று கொண்டிருக்கும் பொழுது தம் வகுப்பில் தாமே முதல்வராக இருக்க வேண்டும் என்று விரும்பினார். ஆனால், அதற்கு வேறோர் மாணவன் எப்பொழுதும் போட்டியாக இருந்து வந்தான். அவன் கேள்விகளுக்கு விடை சொல்ல எழுந்திருந்ததும், தன் சட்டையிலிருந்த ஒரு பித்தானைப் பிடித்து விரல்களால் தடவிக் கொண்டிருப்பதை அவர் கண்டார். அவனுக்குத் தெரியாமல் அந்தப் பித்தானை அகற்றிவிட வேண்டுமென்று அவர் தம் நண்பர்களுடன் யோசனை செய்து ஒருநாள் அவ்வாறே செய்து முடித்து விட்டார்.

அன்று ஆசிரியர் அவனிடம் கேள்வி கேட்டதும், அவன் எழுந்திருந்து வழக்கம்போல் தன் அருமைப்பித்தானை விரல்களால் தடவிப் பார்த்தான். சட்டையில் அந்தப் பித்தான் இல்லாததால் அவனால் பதில் சொல்ல முடியவில்லை. பித்தானைப் பிடித்துக் கொண்டால்தான் அவன் முறையாகப் பதில் கூற முடியும் என்ற அளவிற்கு அந்தப் பழக்கம் அவனை ஆட்கொண்டிருந்தது!

டி. எஸ். நாதன்.

பிட்பாய் குட்டிக் கதைகள்

தொகுத்தவர்: கு. அழகிரிசாமி

[பிட்பாய் அல்லது பில்பாய் என்பவர் கி. பி. 3ம் நூற்றாண்டில் இந்தியாவில் வாழ்ந்த தத்துவ ஞானி. ஜாதியில் பிராமணர். அவர் ஓர் இந்திய அரசனுக்கு நீதிகளை விளக்குவதாகச் சொல்லிய கதைகளின் சமஸ்கிருத மூலம் இன்று கிடைக்கவில்லை. கி. பி. 750–லேயே அது அரபு மொழியில் பெயர்க்கப் பட்டது. அந்த மொழி பெயர்ப்பும், சென்ற நூற்றாண்டில் செய்யப்பட்ட அதன் ஆங்கில மொழி பெயர்ப்புக்களும் தான் இப்பொழுது உள்ளன.]

மந்திரிக்குக் கிடைத்த பரிசு

ஒரு காலத்தில் ஓர் அரசன் இருந்தான். அவன் ஒருநாள் தன் மந்திரியை ஓர் தனியிடத்திற்கு அழைத்துச்சென்று உம்மிடம் எனக்கு உள்ள நம்பிக்கை



யினால் பரம ரகசியமான விஷயத்தை இப்போது சொல்லப் போகிறேன். அதாவது ''என் தம்பியிடம் எனக்கு ஒரு சந்தேகம் ஏற்பட்டிருக்கிறது. என்னைக் கொன்று விட அவன் சதி செய்து கொண்டிருப்பது போல் தோன்றுகிறது. அதைத் தடுக்க வேண்டும். நீர் சாதுரியமாக அந்தக் காரியத்தைச் செய்ய வேண்டும்'' என்று கூறினான்.

''அப்படியே செய்கிறேன்'' என்று சத்தியம் செய்து கொடுத்தான் மந்திரி. அரசனிடம் விடை பெற்றுத் திரும்பிய அவன் முதல் காரியமாக அரசனுடைய தம்பியின் இருப்பிடத்தை நோக்கிச் சென்று அவனிடம், ''தங்களைக் கொன்று விடுவதற்குத் தங்கள் தமையனரான அரசர் முடிவு செய்திருக்கிறார். என்னிடம் அவருக்கு உள்ள நம்பிக்கையினால் இந்த ரகசியத்தை எனக்கு மட்டும் கூறினார்'' என்று சொன்னான்.

அதைக் கேட்ட தம்பி, ''மந்திரியாரே! முன் ஜாக்கிரதையாக நான் நடந்து கொள்வதற்கு உதவியாக இப்பொழுதே வந்து இந்தச் செய்தியைக் கூறினீர்கள். உங்களுக்கு என்றாவது நான் பெரிய வெகுமதிகள் அளிப்பேன்'' என்று சொன்னான்.

சில நாட்களுக்குப் பிறகு அரசன் இறந்து போகவே, தம்பி பட்டத்திற்கு வந்தான். அவன் பெரிய வெகுமதிகள் அளிப்பான் என்ற நம்பிக்கையோடு அவனைப் பார்க்கச் சென்றான் மந்திரி. அரச பதவி ஏற்ற தம்பி முதற் காரியமாக மந்திரிக்கு மரண தண்டனை விதித்தான்.

''நான் செய்த உதவிக்கு எனக்குத் தாங்கள் அளிக்கும் வெகுமதி இது தானா?'' என்று கேட்டான் மந்திரி.

''ஆம். அரசன் சொன்ன பரம ரகசியமான விஷயத்தை மற்றவர்களிடம் போய் வெளியிடுகிற எவனும் மரண தண்டனை அடைவதே நியாயம்! அந்தப் பயங்கரக் குற்றத்தை நீ செய்திருக்கிறாய். உன்னிடம் நம்பிக்கை வைத்து என் தமையனார் சொன்ன ரகசியமான விஷயத்தை உடனே என்னிடம் ஓடி வந்து சொன்னவன் அல்லவா நீ? தமையனாருக்குத் துரோகம் செய்த நீ எனக்கும் துரோகம் செய்ய மாட்டாய் என்பது என்ன நிச்சயம்?'' என்று கேட்டான் தம்பி.

நான்கு நண்பர்கள்

ஒரு காட்டில் ஒரு காக்கை, ஒரு எலி, ஓர் ஆமை, ஓர் ஆடு ஆகிய நான்கும் நட்புறவு கொண்டு ஒன்றாக வாழ்ந்து வந்தன. ஒருநாள் ஆடு மேயப்போன

இடத்தில் ஒரு வேடன் விரித்திருந்த வலையில் சிக்கிக் கொண்டது. அதைப் பார்த்த காக்கை எலியிடமும் ஆமையிடமும் வந்து, ''நம் நண்பனுகிய ஆடு வலையில் சிக்கிக் கொண்டது. உடனே போய் அதை விடுவிக்கா விட்டால் வேடன் கொண்டு போய் விடுவான்'' என்று கூறியது. அப்பொழுது எலி காக்கையைப் பார்த்து, ''நீ என்னைத் தூக்கிக் கொண்டு போய் வலையின் பக்கம் விட்டுவிடு. நான் வலையைக் கடித்துத் துண்டு துண்டாகக் கத்தரித்து விடுகிறேன் என்று சொல்லவே காக்கை எலியைத் தூக்கிக்



கொண்டு போய் வலையின் பக்கம் விட்டது. எலியும் வலையைக் கத்தரித்து முடித்த போது ஆமையும் தன் நண்பனுக்கு உதவ அங்கு வந்து சேர்ந்தது. அப்போது வேடனும் வந்து விட்டான். உடனே எலி ஒரு பொந்தில் போய்ப் பதுங்கி விட்டது.

''நீ ஏன் இங்கு வந்தாய்? உன்னுல் வேகமாக ஓடவும் முடியாதே?'' என்று ஆமையைப் பார்த்துச் சொல்லி விட்டு ஆடு ஒரு புதருக்குள் ஓடி மறைந்தது.

கத்தரிக்கப்பட்ட வலையையும் ஆமையையும் பார்த்தான் வேடன். 'ஆடு தப்பி விட்டாலும் ஆமை கிடைத்தது. பரவாயில்லை' என்று வேடன் ஆமையைப் பிடித்துக் கோணிப் பைக்குள் போட்டுக் கொண்டு நடந்தான்.

ஆமைக்கு நேர்ந்த கதியைப் பற்றிக் காக்கையும், எலியும், ஆடும் கூடிப் பேசின. ஆமையைத் தப்புவிக்க என்ன செய்யலாம் என்று யோசித்துக் கொண்டிருந்த போது எலி ஆட்டைப் பார்த்து, ''நீ வேடனுக்கு முன்னுல் போ. அவன் உன்னை பிடிப்பதற்காகக் கோணிப் பையை கீழே போட்டுவிட்டுத் துரத்துவான். நீ தப்பி ஓடிவிடு. நான் கோணிப்பையைக் கத்தரித்து ஆமையை மீட்டு வருகிறேன்'' என்று கூறியது. அதன் படியே ஆடு வேடனின் முன்னுல் வந்து திரியவே அவன் பையைக் கீழே போட்டு விட்டு ஆட்டைத் துரத்திக் கொண்டு ஓடினுன். எலியும் கோணிப் பையைக் கத்தரித்து விட்டது. ஆமையும் தப்பி ஓரிடத்தில் போய்ப் பதுங்கி விட்டது.

வெகு தூரம் ஓடியும் ஆட்டைப் பிடிக்க முடியாமல் களைத்துப்போய், 'ஆமையையாவது வீட்டுக்குக் கொண்டு போவோம்' என்று வேடன் திரும்பி வந்தான். ஆமை அங்கு இல்லாமல் போகவே வேடன் ஏதோ பிசாசுகள் தான் தன்னை இப்படி ஏமாற்றிக்கொண்டிருக்கின்றன என்று பயந்து வீட்டுக்கு ஓடிவிட்டான்.

நான்கு நண்பர்களும் மீண்டும் ஒன்று கூடி, 'இப்படியே ஒற்றுமையாக வாழ்ந்தால் நம்மை யாரும் எதுவும் செய்ய முடியாது' என்று பேசிக் கொண்டன.

வேடனின் முடிவு

ஒரு வேடன் ஒரு நரியைப் பிடிப்பதற்காக ஒரு பெரிய குழிவெட்டி, அதன் மேல் சிறு குச்சிகளைப் மேலே போட்டு பரப்பி மூடி வைத்து, அதன் மேல் ஒரு மாமிசத் துண்டையும் வைத்து விட்டு பக்கத்தில் இருந்த ஒரு புதருக்குள் போய் மறைந்து கொண்டான். சிறிது நேரத்தில் நரி அங்கே வந்தது. மாமிசத் துண்டை எடுத்துச் சாப்பிட விரும்பியது. ஆனுலும் அது முன் ஜாக்கிரதையுடன் நடந்து கொள்ளும் தன் வழக்கப்படி அங்கேயே நின்று சிறிது யோசித்தது. 'இன்று மட்டும் மாமிசத் துண்டு இங்கே கிடப்பானேன்? இதில் ஏதோ சூழ்ச்சி இருக்க வேண்டும்' என்று நினைத்து, மாமிசத் துண்டைத் தொடாமலே அப்பால் போய் விட்டது. பிறகு சிறிது நேரம் கழித்து அங்கே ஒரு சிறுத்தை வந்தது. அது முன்பின் யோசியாமல் மாமிசத் துண்டை எடுக்க ஆவலோடு பாய்ந்தது. அதன் பாரம் தாங்காமல் குச்சிகள் ஒடியவே சிறுத்தை குழிக்குள் விழுந்து விட்டது. அது விழுந்த சப்தத்தைக் கேட்ட வேடன், நரிதான் விழுந்து விட்டது என்று

எண்ணி அதிகவேமாக ஓடிவந்துகுழியில் குதித்தான். மாமிசத் துண்டுக்காக ஆசைப் பட்டுக் கடைசியில் குழியில் விழுந்து விட்டதற்காகக் கோபம்



கொண்டிருந்த சிறுத்தை தன் கோபத்தையெல்லாம் வேடனிடம் காட்டி அவனைக் கொன்று அங்கேயே தின்று விட்டது.

வானம்பாடியும் குடியானவனும்

ஒரு குடியானவன் தன் தோட்டத்தில் சில ரோஜாச் செடிகளை வளர்த்து வந்தான். ரோஜாப் பூக்களிடத்தில் அவனுக்குக் கொள்ளை ஆசை. தினந்தோறும் காலையில் தோட்டத்திற்குச் சென்று, அப்போதுதான் மலர்ந்த பூக்களைப் பார்த்து இன்பத்தில் திளைப்பது அவன் வழக்கம்.

ஒருநாள் காலையில் ஒரு வான்ம்பாடி வந்து ஒரு ரோஜாச் செடியின் இலைகளை ஒவ்வொன்றாகக் கொத்திக் கொத்திப் பறித்தது. இதைப் பார்த்த குடியானவன் மிகவும் ஆத்திரம் கொண்டு மறுநாள் ரோஜாச் செடிகளின் பக்கம் வலை விரித்து வைத்தான். அன்று அங்கு வந்த வானம்பாடி வலையில் சிக்கிக் கொண்டது. உடனே குடியானவன் அதை ஒரு கூண்டுக்குள் பிடித்துப் போட்டான். அப்போது வானம்பாடி மிகுந்த துயரத்துடன், ''என்னை ஏன் கூண்டுக்குள் அடைத்தாய்?'' என்று கேட்டது.

''என் ரோஜாச் செடியின் இலைகளை நீ ஏன் பறித்தாய்? ஒவ்வொரு இலையையும் நீ பறிக்கும் போது நான் என் நெஞ்சிலிருந்து ஒவ்வொரு துளி ரத்தத்தைச் சிந்திக் கொண்டிருந்தேன், தெரியுமா?'' என்றான் குடியானவன்.

''ஒரு சிறு குற்றத்திற்கு நீ பெரிய தண்டனை விதித்திருக்கிறாய்? எனக்கு நீ செய்யும் இந்தக் கொடுமையை மறு ஜன்மத்தில் நீ அனுபவிக்க நேரிடும் என்பது உனக்குத் தெரியாதா?'' என்று கேட்டது வானம்பாடி.

குடியானவன் மனம் மாறி வானம்பாடியை விடுதலை செய்தான். அது நன்றியுணர்ச்சியோடு, ''எனக்கு நீ செய்த நன்மைக்குப் பதிலாக, நான் உனக்கு ஒரு நன்மை செய்ய விரும்புகிறேன். அதோ தூரத்தில் தெரிகிறதே, அந்த மரத்தின் கீழே ஒரு புதையல் இருக்கிறது. ஒரு பானையில் நிறையத் தங்க நாணயங்கள் இருக்கின்றன. நீ போய் பூமியைத் தோண்டி எடுத்துக் கொள். கடவுள் உனக்குத் துணை செய்வாராக'' என்றது.

வானம்பாடி சொன்ன படியே குடியானவன் புதையலைத் தோண்டி எடுத்தான். அப்புறம் ஆச்சரியத்தோடு வானம்பாடியைப் பார்த்து, ''பூமிக்கு அடியில்



புதைந்து கிடக்கும் இந்தப் பானையைப் பார்க்க முடிகிற உனக்கு, நான் விரித்த வலையை மட்டும் எப்படிப் பார்க்க முடியாமல் போய் விட்டது?'' என்று கேட்டான்.

''அதுதான் விதி'' என்றது வானம்பாடி.

மூட்டைப் பூச்சி

கே. கே. ராஜன்., எம். ஏ. எம். எஸ்ஸி.

தூங்கும் பொழுது இரத்தத்தை உறிஞ்சித் தொல்லைதரும் உயிரினங்கள் இரண்டு. ஒன்று கொசு, மற்றது மூட்டைப்பூச்சி. மூட்டைப் பூச்சியானது வெப்ப மண்டல நாடுகளுக்கே உரிய உயிரினம். இது பூச்சி வகைகளிலுள்ள சைமிசிடேயி (cimicidae) என்ற குடும்பத்தைச் சார்ந்ததாகும். மூட்டைப் பூச்சியின் உருவம் நீண்ட வட்ட வடிவமாகும். தலையின் முன்புறம் இரு நுண் உணர்விகள் உண்டு. இந்த நுண் உணர்விகளில் சக்தி வாய்ந்த உரோமங்கள் உள்ளன. வெப்ப நிலையின் மாறுதலை அறிந்து கொள்ள இவைகள் உதவுகின்றன. மேலும் மனித உடலிலிருந்து வெளிவரும் இரத்த வாடையை இந்த உரோமக் கற்றைகள்தான் மூட்டைப் பூச்சிக்கு உணர்த்துகின்றன.

மூட்டைப் பூச்சியின் தாடையானது நீண்ட குழல் போல இரத்தத்தை உறிஞ்சுவதற்கு ஏற்ற வகையில் அமைந்துள்ளது.

இரத்தத்தை உறிஞ்சும் போது இரத்தம் உறைதலை உமிழ்நீர்ச் சுரப்பிகள் தடை செய்கின்றன. இரத்தத்தை உறிஞ்சும் பொழுது இந்த உறிஞ்சு குழலானது முன்புறம் நீட்டப் படுகிறது. ஏனைய சமயங்களில் வாயின் கீழ்ப்பகுதியில் மடக்கப் படுகிறது.


மூட்டைப் பூச்சி ஓர் இடத்தில் இருப்பின் அங்கிருந்து தாங்க முடியாத நாற்றம் சில சமயங்களில் வருவதுண்டு. அதன், பின் கால்களில் அமைந்திருக்கும் சில சுரப்பிகளின் உற்பத்தியே இதற்குக் காரணம் என்று உயிரியலார் கருதுகின்றனர்.

மூட்டைப் பூச்சியை ஒருசில நாடுகளில் மருந்தாகப் பயன்படுத்துகின்றனர். பண்டைக் காலத்தில் கிரேக்கர்கள் மூட்டைப் பூச்சிகளை அரைத்து நீரில் கலக்கி அதை மயக்கம் நீக்கும் மருந்தாகப் பயன் படுத்தினராம். பாம்பின் விஷத்தைப் போக்கும் நச்சு முறிவு மருந்தாகவும் இது பயன் பட்டதாம்.

மூட்டைப் பூச்சியானது சுவரிலுள்ள வெடிப்புக்கள், மேஜை, நாற்காலி, கட்டில் போன்றவற்றின் அடிப்பகுதி முதலியவற்றில் மறைந்து வாழும். இரவில் தான் இரை தேட வெளி வரும். இரத்தத்தை உறிஞ்சும் பொழுது மனிதனின் உடலில் ஏறி இரத்தத்தை உறிஞ்சுவதை மூட்டைப் பூச்சி விரும்புவதில்லை. படுக்கையில் பதுங்கிக் கொண்டு தன் உறிஞ்சியை மாத்திரம் உடலில் செலுத்தி உறிஞ்சவே முயற்சி செய்கிறது.

ஒரு மூட்டைப் பூச்சி வயிறு நிறைய இரத்தம் உறிஞ்ச சுமார் பத்திலிருந்து பதினைந்து நிமிடமாகும். இரத்தம் வயிற்றில் நிறைந்து கொண்டிருக்கும் பொழுதே அதன் மலக் குடலிலிருந்து மலம் வெளியேற்றப் படும். ஒரு தடவை வயிறு நிறைய இரத்தம் குடித்து விட்டால் அது ஜீரணமாக ஒரு வார காலமாகும். இரத்தம் இல்லாமல் சுமார் ஒரு வருடம் மூட்டைப் பூச்சி உயிர் வாழும் தன்மையினை உடையது. இக்காலங்களில் இதன் உடல் காய்ந்த சருகு போல வெளுத்துக் காணப் படும். கோடைக் காலங்களில் மூட்டைப் பூச்சி மிகவும் கறுகறுப்பாய்க் காணப் படும்.

மூட்டைப் பூச்சியின் முட்டையானது முத்துப் போல வெண்மை



நிறம் உடையது. நீண்ட வட்ட வடிவமுடைய இந்த முட்டையின் தலைப் பகுதி சிறிது கட்டையாயிருக்கும். ஒரு பெண் மூட்டைப் பூச்சியானது ஒரு தடவைக்கு 100லிருந்து 250 முட்டைகளை இடும். ஆறிலிருந்து பத்து நாட்களுக்குள் முட்டையிலிருந்து இளசுகள் வெளிவரும். ஏழுமுதல் பத்து வாரங்களுக்குள் இளசானது முழு வளர்ச்சியடையக் கூடும்.

ஆப்பிரிக்காவில் ''பாவுட்டி'' என்ற வகை மூட்டைப் பூச்சி உள்ளது. இது கடித்தால் தாங்க முடியாத வலி ஏற்படும். இதன் உடல் முழுவதும் பட்டுப் போன்ற பளபளக்கும் உரோமங்கள் வளர்ந்திருக்கும். கால்கள் மிக நீளமானவை;

பாவுட்டி மூட்டைப் பூச்சியின் உருவம் நீண்ட சதுரமாகும்.

மூட்டைப் பூச்சியின் மூலம் ஒருசில வியாதிகள் பரவக் கூடும் என்று விலங்கியலார் கருதுகின்றனர். டைபாய்டு, பிளேக், தொழுநோய் போன்ற நோய்களை உண்டாக்கும் வைரஸ்களும் (Virus), பாக்டீரியாக்களும் (Bacteria) மூட்டைப் பூச்சிகளின் வயிற்றில் வாழ்வதைக் கண்டு பிடித்துள்ளனர். வீட்டிலே வாழும் மூட்டைப் பூச்சிகளைவிட, சினிமா அரங்குகளிலும் விடுதிகளிலும் உள்ள மூட்டைப் பூச்சிகள் அதிக அளவில் தொற்று நோயைப் பரப்புகின்றன.

இவ்வாறு நித்திரையைக் கெடுத்து இரத்தத்தை உறிஞ்சி, நோயைப் பரப்பும் மூட்டைப் பூச்சிகளை ஒழிப்பதில் நாம் தீவிர கவனம் செலுத்தல் வேண்டும். வீட்டிலுள்ள நாற்காலி, மேஜை போன்ற மரச்சாமான்கள், சுவர்களிலுள்ள இடைவெளிகள் முதலியவற்றை வாரம் ஒருமுறை சுத்தமாகத் துடைத்து மூட்டைப் பூச்சிகள் வளரவிடாமல் தடுக்க வேண்டும். இதையும் மீறி மூட்டைப் பூச்சிகள் வந்து விட்டால் கடையில் விற்கும் மூட்டைப் பூச்சிக் கொல்லி மருந்துகளை வாங்கி மிகக் கவனமாக மூட்டைகள் அடையும் பகுதியில் தெளித்தல் வேண்டும். தெளித்த பிறகு காலிப் புட்டிகளை உடைத்து ஊருக்கு வெளியே எறிந்துவிடுவது நலம். மூட்டைப்பூச்சி மருந்துகளில் ஹைட்ரஜன் சையனைடு, மீதைல் ப்ரோமைடு போன்ற விஷமுள்ள இரசாயனப் பொருட்கள் உள்ளன. இவை நம் உடலில் சேருமானால் ஆபத்தை விளைவிக்கக்கூடும்.



எங்கள் தீபாவளி

செலவுதான் விணுய்ச் செய்திடல் வேண்டாம்
தீபா வளிக்கே எனக்கென்று
சின்னத் தங்கை கூறிய உடனே
சிரித்தே மகிழ்ந்தார் என் அப்பா!

விளையாட் டல்ல! உண்மை! எனக்கும்
வெடிதான் வேண்டாம்! எனத்தம்பி
விளக்கிய உரையும் கேட்டு மகிழ்ந்தார்!
''வெரிகுட்'' என்ருர்! என் அப்பா!

புலமைதான் மிகுந்த அம்மா கூடப்
புடவையும் வேண்டாம்! எனச்சொல்லிப்
புதிர்தான் போட்டாள் அதனையும்கேட்டுப்
புன்னகை புரிந்தார்! என் அப்பா!

அழுதுயாம் முரண்டிக் கேட்கும்போ தெல்லாம்
அவசிய மில்லை! எனச்சொல்லி
ஆயிரம் கோபம் கொள்பவர்! இன்றே
அதிசயம் கொண்டார்! என் அப்பா!

விலைமிக உயர்ந்த புடவைகள் ஜாக்கெட்
வெடிகள் யாவும் உடன்வாங்கி
வெகுமதி யாக எங்களுக்கு அளித்தார்!
விடிந்தது! தீபா வளிதானே!

டெல்லி.

ஆ. கணபதி.



கன்றுக் குட்டி



தம்பி வளர்க்கும் ஒருகன்று
தாவித் துள்ளும்; மிகநன்று
நம்பிக் கயிற்றை விட்டாலோ
நன்ருய் ஊரைச் சுற்றுமடா!

பண்ணும் தொல்லை பலவாகும்
பானை எல்லாம் தூளாகும்
உண்ணும் நேரம் வந்தாலோ
உடனே வீட்டைத் தேடிவரும்

பாப்பா தூங்கும் அறைக்குள்ளே
பாசத் தோடு ஓடிவரும்
அப்பா அம்மா எல்லோரும்
'ஐயோ வம்பு!' என்பாரே!


அக்கா பின்னல் போய்நின்று
அழகுச் சடையை இழுத்துவிடும்
கொக்குப் போல நின்றவளோ
கோபத் தோடு கத்திடுவாள்!

எண்ணெய் பாட்டில், கண்ணுடி
எல்லாம் கீழே விழுகிறது
கண்ணுல் அங்கு பார்த்தாலோ
கன்றுக் குட்டி நிற்கிறது!


'அம்மா' என்று அதுகத்தும்
அன்புக் குரலைக் கேட்டாலோ
அம்மா கோபம் விடுகின்ருள்
'அழகுக் கன்று' என்கின்ருள்!


பூதலூர் முத்து





இன்று நான் செய்தது போல் பக்தர்கள் யாவரும்
உன் முன் கைகளால் காதுகளைப் பிடித்து
(தோர்பிகர்ணம்) வணங்கட்டும்.
நான் வருகிறேன்.
ஒரு சமயம் சப்தரிஷிகள்,
சோணபத்ர கல்லில் கடவுளை
ஆவாஹனம் செய்து பூஜை
செய்து கொண்டிருந்தனர்.
விநாயகர் அக்கல்லை
எடுத்து விழுங்கி விட்டார்.

ஹஸ்தின் வாண்டுமாமா விஷு,






ஆசிரியர்: நீ ஏண்டா கையை நீட்டுறாய்? நீதான் கணக்குச் சரியாகப் போட்டிருக்கிறாயே?
பையன்: எங்கப்பாரு உங்களைக் கேட்டுப் பால் பாக்கி வாங்கியாறச் சொன்னாரு கொடுக்கறீங்களா?
அன்புச் செல்வன்.
பாலு: ஏண்டா, நீ உங்க அப்பா சொன்னாத் தான் கேட்பியாம், அம்மா சொன்னாக் கேட்க மாட்டியாமே.
கிட்டு: ஆமாம், எங்கப்பா கதை சொல்லுவார், எங்கம்மா காரியம் சொல்லுவா.
ஆர். பாலசந்திரன்
ஒருவர்: என் மகனுக்குப் பெண் பார்த்து வரச் சொன்னால் சர்க்கஸ் பெண்ணை ஏன் அழைத்து வந்தீர்கள்?
தரகர்: நீங்கதானே எதற்கும் வளைந்து கொடுத்துப் போகிற பெண்ணாக இருக்கவேண்டும் என்று சொன்னீங்க!
செல்வி லாவண்யா.
லாண்டிரிக்காரர்: ஏண்டா, பையா என்ன கணக்குல இருபது ரூவா உதைக்குது?
பையன்: கழுதை வாங்கினதைக் கணக்குல எழுதினீங்களா?....
லா. கா: அடடே, அதான் உதைக்குதா?
ஆர். உப்பிலி.
சர்வர்: நெற்றி வியர்வை விழப் பாடுபட்டு எங்கள் சரக்கு மாஸ்டர் தயாரித்த ஸ்வீட் எப்படி இருந்தது சார்!
சாப்பிட வந்தவர்: அல்வா உப்புக் கரித்ததே. அதனால்தானா?....!"
செல்வி லாவண்யா.
பேராசிரியர்: 18வது நூற்றாண்டில் வாழ்ந்த பெரிய மனிதர்களைப் பற்றி உன்னால் ஏதாவது கூற முடியுமா?
மாணவன்: ஓ... முடியுமே! அவர்கள் அனைவரும் இறந்து விட்டார்கள்!"
செல்வி லாவண்யா.



பலே பாலு - பங்களா மர்மம்

வாண்டுமாமா

(சென்ற இதழ்த் தொடர்ச்சி)

கந்தனுக்கு உதவுவதாக முடிவு செய்த பாலு அந்த மறைவிடத்திலிருந்து அவனை அழைத்துக் கொண்டு கிளம்பினான். பள்ளிக்குப் போகும் வழியில் ஒரு பெரிய பங்களா இருந்தது. பழங்காலத்தது. எந்த ஜமீன்தாருடையதோ. ஆனால் இன்று பாழடைந்த நிலையில் ஊருக்கு வெளியே ஒதுக்குப்புறமாக இருந்தது. தினமும் அதைத் தாண்டிக் கொண்டுதான் பாலு பள்ளிக்குப் போவான். அடர்ந்து வளர்ந்து கிடந்த பெரிய தோப்பின் நடுவே இருந்தது அந்த மாளிகை - மர்மக் கதைகளில் வரும் பங்களாவைப் போல.

அதை அடைந்த பாலு, ''இங்கு நீ இரண்டொரு நாட்கள் கவலையில்லாமல் தங்கியிருக்கலாம். இந்தப் பங்களாவில் இப்போது யாரும் இல்லை. உன் மாமா உன்னைத் தேடி அலுத்துப் போய், நீ கிடைப்பாய் என்ற எண்ணத்தைக் கைவிடும் வரையில் நீ இங்கு இருக்கலாம். நான் உனக்குப் பசிக்கு உணவு கொண்டு வந்து தருகிறேன்'' என்றான்.

கந்தன் பாலுவைக் கட்டிக் கொண்டான். அவன் கண்கள் கலங்கின. ''பாலு! என் அம்மாவுக்குப் பிறகு இப்படியொரு அன்பை உன்னிடம்தான் அனுபவிக்கிறேன். எனக்காக நீ எவ்வளவு சிரமப்படுகிறாய்'' என்றான். பாலுவுக்கும் கந்தனை ரொம்பப் பிடித்து விட்டது.

''நான் இருட்டிய பிறகு உணவோடு வந்து உன்னைச் சந்திக்கிறேன். இப்போது நான் ஸ்கூலுக்கு ஓடியாக வேண்டும். என் சைக்கிள் அந்தப் பாலத்திலேதான் இருக்கும். அதைப் பூட்டியிருப்பதினால் உன் மாமா அதைக் கிளப்பிக் கொண்டு போயிருக்க மாட்டார். பயமில்லாமல் இருப்பாயா இங்கு?''

''பயமா? என் மாமாவிடம் நான் ஒவ்வொரு விநாடியும் நடுங்கிக்கொண்டு வாழ்ந்தேனே அதை விட இது எவ்வளவோ மேல்'' என்று உற்சாகமாகக் கந்தன் கூறவே பாலு விடை பெற்றுக்கொண்டான்.

கந்தன் அந்தப் பெரிய பங்களாவை அதிசயமாகப் பார்த்தான். ''எத்தனை பெரிய கட்டிடம்! இப்படிப் பாழடைந்து கிடக்கிறதே. ஒரு காலத்தில் இது ரொம்ப அழகாக இருந்திருக்க வேண்டும்'' என்று எண்ணியபடியே அதனுள் புகுந்து ஆராயலானான். விசாலமான கூடங்களும் அறைகளுமாக இருந்தது. ஆங்காங்கே குப்பை கூளங்கள். இவனைப் போலவே வழிப்போக்கர்களோ, பிச்சைக்காரர்களோ அங்கு தங்கிச் சமையல் செய்திருப்பதற்கான அடையாளங்கள் கரியும் விறகும் சாம்பலுமாகக் காணப்பட்டன. சில சாமான்கள் உடைந்தும், மக்கியும் நாசமாயும் இருந்தன.

திடீரென்று கிரீச்சென்று ஒரு சத்தம். தைரியசாலியான கந்தனின் நெஞ்சுமே தடதடத்தது. ஏதாவது கதவு காற்றில் அசைந்திருக்கலாம். என்று திடப்படுத்திக் கொண்டான்.. மெள்ள நடந்தான்.

மறுபடியும் ''தடால்'' என்று ஒரு சத்தம். கந்தனுக்கு அதிர்ச்சி. சட்டென்று கீழே கிடந்த ஓர் உடைந்த கழியைக் கையில் எடுத்துக் கொண்டான். ''யாரது? யார் இங்கே?'' என்று கேட்க நினைத்தான். ஆனால் குரல் குழறியது. ஏதோ சாமான்கள் சரிந்து விழுவது போன்ற சத்தம். கையில் கழியுடன் அங்கு போனான். பாதி திறந்திருந்த ஓர் அறைக்குள்ளிருந்துதான் அப்படிச் சத்தம் வந்தது. துணிவைக் கூட்டிக் கொண்டு உள்ளே எட்டிப் பார்த்தான். தட்டு முட்டுச் சாமான்கள், உடைந்த நாற்காலி, மேஜை, சட்டி பானை, குச்சி கோல் இப்படிக் கண்டான் முண்டான் - சாமான்கள் அங்கு குவிக்கப்பட்டிருந்தன. அந்தப் பங்களாவின் பொருள்களை அங்கு அப்படிக் குவித்திருந்தார்கள் போலும். பூட்டு இற்றுப் போய்த் தானாகக் கதவு திறந்திருக்

கிறதா அல்லது யாராவது பூட்டை உடைத்து....

கந்தனுக்கு யோசிக்க நேரமில்லை. உள்ளே முழு இருட்டுமில்லை. நல்ல வெளிச்சமுமில்லை.

''யாரது? யாராக இருந்தாலும் வெளியே வாருங்கள்'' என்று கத்தினான் கந்தன். அப்படிக் கத்துவது அவனுக்கே வேடிக்கையாக இருந்தது. கொஞ்ச நேரம் சலனமே இல்லை—அவன் இதயத் துடிப்பைத் தவிர. பிறகு 'மியாவ்' என்று ஒரு குரல் கேட்டது. கவிழ்ந்து கிடந்த ஒரு கள்ளிப் பெட்டிக்கு அடியிலிருந்து ஒரு பூனை தலையை நீட்டி மறுபடியும் 'மியாவ்' என்றது. திகிலோடு நின்று கொண்டிருந்த கந்தன் குபீரென்று சிரித்து விட்டான். ''அட நீதானா? என்னைப் போல நீயும் இந்த வீட்டில் தங்கி இருக்கிறாயா? நீயும் அநாதைதானா?'' என்று அந்தப் பூனைக் குட்டியையெடுத்து அணைத்துக் கொண்டான். ''இனி நீயும் நானும் தோழர்களாக இருப்போம்'' என்றபடி அதன் பட்டுடலைத் தடவிக் கொடுத்தான். பூனையும் சுகமாகக் கண்களை மூடிக் கொண்டு அவன் அணைப்பில் சுருண்டு சுகமாக முடங்கிக் கொண்டது.

அங்கு கிடந்த பொருள்களை ஆராய்ந்தான் கந்தன். ஒரு மெழுகுவர்த்தி கிடைத்தது. காலிப் பெட்டிகள் சிலவற்றை ஒன்று சேர்த்துப் போட்டான், அதிகக் குப்பையில்லாத ஓர் அறையில்-படுக்க, உட்கார வசதியாக. காலி சீசா ஒன்று கிடைத்தது. அதன் வாயில் மெழுகு வர்த்தியைத் திணித்துக் காடா விளக்குப் போலாக்கினான். அவன் அதிர்ஷ்டம் ஒரு நெருப்புப் பெட்டி கூடக் கிடந்தது அங்கு. யாரோ விட்டுப் போயிருக்க வேண்டும். ''இரவு இருட்டுக்கு இந்த மெழுகு வர்த்தி உதவியாக இருக்கும். பொழுது போகத் தோழனாக நீ கிடைத்து விட்டாயே!'' என்று பூனைக் குட்டியை அணைத்துக் கொண்டான்.

மாலையில் பாலுவின் வீடு தேடி ஏட்டையா ஏழுமலை வந்தார். பாலுவும் வீட்டிலிருந்தான். போலீஸ்காரரைக் கண்டதும் பாலுவின் அப்பாவுக்கு வியப்பும் திகைப்புமாக இருந்தது. ''என்ன சார்? வாங்க, என்ன விசேஷம்?'' என்று வரவேற்றார்.

''உங்க பையன் பாலுவைப் பத்தித்தான் சார். பள்ளிக்கூடத்திலிருந்து வந்துட்டானா?'' என்றார் ஏட்.

''இருக்கிறானே, என்ன விஷயம்? ஏய் பாலு!'' என்று குரல் கொடுத்தார் அப்பா.

''எங்களுக்கு ஒரு கம்ப்ளெய்ண்ட் வந்திருக்கு. நம்ம தம்பி வீட்டைவிட்டு ஓடிப் போக முயற்சி செய்த ஒரு பையனுக்கு உதவி செய்து அவனைத் தப்ப வைத்திருக்கிறான். அவன் மாமா எங்கவிடம் புகார் கொடுத்திருக்கார். அது விஷயமாப் பையனை நேரே விசாரிச்



கட்டுப் போகலாம்னுதான் வந்தேன்'' என்றார் ஏட்டையா.

பாலுவின் அப்பா மௌனமாகத் தன் பார்வையாலேயே பாலுவை ''இதெல்லாம் என்ன?'' என்று கேட்டார். அப்பாவின் கோபமான பார்வையைப் பார்த்த பாலு அன்று காலையில் நடந்த கதையெல்லாம் ஒளிக்காமல் கூறினான்.

''அந்தப் பையனை அவர் ரொம்பக் கொடுமைப் படுத்தி இருக்கார். பசிக்குக் கூட உணவு போடுவதில்லையாம். அவன் தன் கதையைக் கூறியதைக் கேட்க ரொம்பப் பரிதாபமாக இருந்தது. அவன் மாமா ரொம்பப் பொல்லாதவராம். அதனாலே நான் அவனுக்கு 'ஹெல்ப்' பண்ணினேன்ம்பா.''

பாலுவின் விளக்கத்தினால் திருப்தியடைந்த ஏட் ''ஆக, அந்தப் பையனை நீ அந்தப் பாழடைஞ்ச பங்களா கிட்ட விட்டுட்டு ஸ்கூலுக்குப் போயிட்டே. அவன் ஐம்பது மைலுக்கு அப்பாலுள்ள யாரோ தெரிஞ்சவர் கிட்ட போகப் போறதாகச் சொன்னானுக்கும் அப்படித் தானே தம்பி?'' என்றார்.

''ஆமாம் சார், அவன் அவரைத் தேடித்தான் போயிருப்பான்'' என்றான்



பாலு. ஏட் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டார்.

இருட்டிக் கொஞ்ச நேரமாயிற்று. துணிச்சல் காரப் பாலு, தன்னை நம்பிக் கொண்டு பசியோடு காத்திருக்கும் கந்தனைச் சந்திக்கத் தயாரானான். மாலையிலேயே அவனுக்குத் தருவதற்

வீரமொழி

நிரபராதியான ஒருவனுக்கு எவன் தீங்கு செய்தாலும், காற்றுக்கு எதிராகத் தூவிய மண், திரும்ப மேலேயே வந்து சாடுவதுபோல் தீங்கு செய்த அந்த மூடனையே பாவம் பற்றிக் கொள்கிறது. - புத்தர்

காக உணவைத் தயாராக ஒரு பையில் எடுத்துப் பத்திரப் படுத்தி இருந்தான். கந்தன் நினைவினால் பாலுவிற்குப் பசி கூடத் தெரியவில்லை. 'நல்ல வேளை, போலீஸ் காரர் அதிகம் குடையவில்லை. அப்பாவும் 'அப்ஸெட்' ஆகவில்லை என்று நிம்மதியடைந்தான் பாலு.

''அப்பா நாளைக்கு டெஸ்ட்...நாங்க இரண்டு மூணு பேரா சேர்ந்து படிக்கப் போறோம். கணக்குப் பிள்ளை பையன் ராமசாமியோட அவன் வீட்டிலே. வர கொஞ்சம் லேட்டானாலும் கவலைப் படாதீங்க'' என்று கூறியபடி இளம்பினான் பாலு. தவறான வழிக்குப் போக மாட்டான், பொய் சொல்ல மாட்டான் என்ற நம்பிக்கை அவன் பெற்றோருக்கு உண்டு. ஆகவே அவன் செயல்களுக்குக் குறுக்கு விசாரணை செய்வதில்லை அவர்கள்.

கந்தனுக்குத் தரவேண்டிய உணவுடன் கால்களை எட்டப்போட்டு நடந்தான் பாலு. ஒரு மைல் போக வேண்டுமே. நிலவு திட்டுத் திட்டாகச் சாலைகளில் கோலம் போட்டிருந்தது. ''பாவம், கந்தன் காலையிலிருந்து பட்டினியாகக் கிடக்கிறான். களைத்துப் போய்த் தூங்கி இருப்பான்'' என்று நினைத்த படியே நடந்தான். நிழலுக்கு நிழல் பதுங்கியபடி ஓர் உருவம் அவனைப் பின் தொடர்ந்து கொண்டிருந்தது. பாவம் பாலு அதை உணராதவனாக வேக வேகமாக நடந்து கொண்டிருந்தான். பெரிய பெரிய மரங்கள் சூழ்ந்திருந்ததால் அந்தப் பெரிய கட்டிடம் இருளில் மூழ்கிக் கிடந்தது. இரவு வேளைகளில் வெளியே கிளம்பினால் எப்போதுமே பாலுவிடம் 'டார்ச்' விளக்கு இருக்கும். அதன் உதவியால் வாசல் பக்கத்தை ஆராய்ந்தான். கதவு திறந்திருந்தது. 'பாவம், கந்தன், பசியினால் களைத்துத் தூங்கிப் போயிருப்பான்' என்று எண்ணியபடி ''கந்தா, கந்தா!'' என்று குரல் கொடுத்தான், கட்டிடத்தின் உள்ளே போய். வெளியில் மரங்களினூடே காற்று புகுந்து 'ஊ' என்ற ஒலியை எழுப்ப, அது உள்ளே அச்சமூட்டும் படியாக எதிரொலி செய்தது. பாலுவைத் தொடர்ந்து வந்த உருவம் ஓர் இருண்ட பகுதியில் மறைந்து நின்றபடி ''இந்தப் பையன் இந்த வேளையில் இங்கே ஏன் வருகிறான்? காலையில் கந்தனுக்கு உதவிய பையனல்லவா இவன். ஒரு வேளை கந்தன் இங்கேதான் ஒளிந்து கொண்டிருக்கிறானோ'' இப்படி எண்ணமிட்டது அந்த உருவம். அது மாணிக்கம்தான் என்பதை இப்போது நீங்கள் புரிந்து கொண்டிருப்பீர்களே!

பாலு அந்தப் பங்களாவில் இங்கும் அங்கும் 'கந்தா கந்தா!' என்று கூப்பிட்டுக் கொண்டே தேடினான். ஆனால் எங்கிருந்தும் அவன் குரலுக்குப் பதில் இல்லை. ஒரு அறையில் இரண்டு மூன்று உடைந்த பெட்டிகளை ஒன்று சேர்த்துப் போட்டு அதன் மீது கிழிந்ததோர் மெத்தையை விரித்திருந்தது. அருகிலே கையுடைந்த ஒரு நாற்காலி. அதன் மீது கண்ணாடிப் புட்டியின் வாயில் செருகிய மெழுகுவர்த்தி ஆடாமல் அசையாமல் எரிந்து ஒளிப் பரப்பிக் கொண்டிருந்தது. ஆனால் அந்தப் படுக்கையில் கந்தனைக் காணவில்லை. ''இவைகளைக் கொண்டு வசதியாகத் தூங்க இப்படி ஒருபடுக்கை தயார் செய்திருப்பது கந்தனாகத்தானிருக்க வேண்டும். ஆனால் அவன் எங்கே?'' பாலுவின் உள்ளம் கேட்டது. ஆனால் விடை கிடைக்கவில்லை.

''கந்தன் எங்கே மாயமாக மறைந்து போனான்?'' வினா விசுவரூபமாகி பாலுவின் நெஞ்சைக் கலக்கியது. இத்தனை நேரமும் பாலுவை நிழல் போலப் பின் தொடர்ந்து பின்னாலேயே வந்து கொண்டிருந்தான் மாணிக்கம். ஆனால் பாலுவின் எண்ணமெல்லாம் கந்தனைப் பற்றியே இருந்ததால் மாணிக்கம் அவன் சிந்தனையில் இடம் பெறவில்லை.

டார்ச் விளக்கினால் அனேகமாக வீட்டில் எல்லாப் பகுதிகளையும் ஆராய்ந்து விட்டான் பாலு. கந்தன் இருப்பதற்கான அடையாளமே காணோம். மறுபடியும் மெழுகுவர்த்தி எரிந்து கொண்டிருந்த அறைக்கு வந்த போது டார்ச் விளக்கின் ஒளி ஒரு மூலையில் எதையோ சுட்டிக் காட்டுவது போலிருந்தது. புழுதி படிந்த தரையில் விரல்களால் ஏதோ எழுதியது போல. நெஞ்சுத் துடிப்புடன் குனிந்து அதன்

கண்ணை உருட்டிக் காட்டும்போது
மிரண்டு போகலே - உலகம்
மிரண்டு போகலே; அட,
கண்ணை மூடிக் கொண்டபோதும்
இருண்டு போகலே - உலகம்
இருண்டு போகலே!

— குடுக்கையார்

வண்ணப்படம்: புஷ்பத்துறை சுப்ரமணியம்



மீது டார்ச் ஒளியைப் பரவ விட்டான் பாலு. கோணல் மாணலான கையெழுத்தில் – அபாயம் கந்தன் – என்று எழுதி இருந்தது. பாலுவுக்குத் 'திகீர்' என்றது.

''அபாயம் என்றால்? ஐயோ கந்தனுக்கு என்ன நேர்ந்ததோ தெரியவில்லையே!'' என்று அவன் வாய் விட்டுக் கூறிய அதே நேரத்தில் அவன் பின்னாலிருந்து கட்டைக் குரலில் மாணிக்கம். ''டேய், பொடிப் பயலே, இதெல்லாம் என்ன? மாணிக்கத்தை என்ன செய்தே உண்மையைச் சொல்லிடு. இல்லே நான் ரொம்பப் பொல்லாதவனா இருப்பேன்'' என்றான்.

கந்தனைக் காணாததைவிட அங்கு மாணிக்கத்தைக் கண்ட பாலுவுக்குப் பகீரென்றது. 'என்னைப் பின் தொடர்ந்தல்லவா வந்திருக்கிறான்?' என்று திடுக்கிட்டவன் மறு விநாடியே சமாளித்துக் கொண்டு ''இந்தாய்யா, உன் மிரட்டலையெல்லாம் எங்கிட்ட வச்சுக்காதே. நான் அந்த அப்பாவி கந்தனில்லே புரிஞ்சுதா?'' என்றான் பாலு, அவனுக்கே உரிய துணிச்சலுடன்.

மாணிக்கம் தன் கொடுவாள் மீசையை முறுக்கியபடி ''என்னடா துள்ளுறே, பொடிப் பயலே! இப்ப மருவாதையா கந்தன் பயல் எங்கேன்னு சொல்லிடு. இல்லே...'' என்று முன்னால் வந்தான் மாணிக்கம்.

பாலு சட்டென்று கீழே கிடந்த ஒரு உடைந்த நாற்காலியின் காலை கையில் எடுத்துக் கொண்டான் தற்காப்புக்காக. ''என் மேலே கை வச்சே... விஷயமே வேறயாப் போயிடும். அப்புறம் போலீசுக்குத்தான் நீ பதில் சொல்ல வேண்டி இருக்கும். கந்தன் இங்கேதான் இருப்பதாகச் சொன்னான். ஆனால் இப்போ இங்கே இல்லே. இதோ கீழே பாருங்க'' என்று புழுதியில் எழுதி இருப்பதைக் காண்பித்தான்.

''எனக்கு இதெல்லாம் படிக்கத் தெரியாது. நீயே சொல்லு'' என்றான் மாணிக்கம்.

''அபாயம் — கந்தன்'' அப்படின்னு எழுதி இருக்கான் கந்தன்.

''அப்படின்னா என்ன அபாயம்? இந்தப் பாழடைஞ்ச வீட்டிலே அவனுக்கு யாரு என்ன செஞ்சிருப்பாங்க?''

''அதெல்லாம் எனக்குத் தெரியாது. கந்தனுக்கு ஏதோ ஆபத்து. அவனைக் காப்பாத்தி – உதவ நான் ஆட்களை இங்கே கூட்டி வரப் போறேன்'' என்று கிளம்பிய பாலுவைத் தாவிப் பிடிக்க ஓடி வந்தான் மாணிக்கம். ''டேய், பொடியா... உதவி கிதவி எதுவானாலும் அதைக் கவனிக்கத்தான் நான் இருக்கேன் இங்கே. புரிஞ்சுதா நீ எங்கேயும் போகக் கூடாது. கந்தன் பயலை என்னிடமிருந்து கடத்திக் கிட்டுப் போன உனக்குத் தகுந்த மரியாதை செய்தாவணும்!''

பாலுவா அவன் கையில் சிக்குவான்? கையிலிருந்த உடைந்த கழியை மாணிக்கத்தின் முட்டியை நோக்கி வீசினான். அதன் தாக்குதலினால் அவன் தடுமாறிய இடை வெளிக்குள் அந்த அறையை விட்டு வெளியேறினான் பாலு. ஆனால் மாணிக்கம் சுதாரித்துக் கொண்டு பின்னால் ஓடி வரவே சட்டென்று உடைந்து கவிழ்ந்து கிடந்த ஒரு ஓட்டை நாற்காலியைத் தூக்கித் தலைக்கு மேல் சுழற்றி மாணிக்கத்தை நோக்கி வீசினான். சண்டைப் படங்களில் கதாநாயகன் வில்லனைத் தாக்கும் லாகவங்களைக் கண்டு வியந்திருக்கும் பாலுவுக்கு இப்போது தானே அப்படிச் செயல் படுவதில் ஒரு மகிழ்ச்சி.

பாலுவின் குறி மாணிக்கத்தின் மார்பில் தாக்கவே அவன் 'அம்மாடி' என்று தலை குப்புறக் கவிழ்ந்து விழுந்தான். பாலு அந்தக் கட்டிடத்தை விட்டு இருளில் ஓடி மறைந்தான்.

ஓடிக் கொண்டிருக்கும் போதே அவன் எண்ணமும் ஓடியது. ''மாணிக்கம் கந்தனை நாடி அங்கு வரவில்லை. அந்தக் கட்டிடத்துக்கு வேறு ஏதோ காரணத்துக்காக வந்திருக்கிறான். என்னைக் கண்டதும் சாதுரியமாகப் பேசுகிறான். இல்லா விட்டால் உதவிக்கு வெளியாட்களை நான் அழைத்து வருவதை அவன் விரும்பாமல் என்னைத் தடுத்து நிறுத்த முயலுவானேன்... எதற்கும் நான் உடனே ஏட்டையாவைப் போய்ப் பார்க்க வேண்டும். மாலையில் நான் கூறியதற்கும் இப்போது நடந்துள்ளதற்கும் என்னை அவர் குற்றம் சாட்டினாலும் கந்தனுக்கு ஏதோ அபாயம்.

அதிலிருந்து அவனைக் காப்பாற்ற நான் உண்மையைக் கூறிப் போலீஸின் உதவியை நாடத்தான் வேண்டும்'' ஓடிக் கொண்டே இந்த முடிவுக்கு வந்தான் பாலு.

ஏட் ஏழுமலையின் வீட்டுக் கதவைத் தட்டினான் பாலு. போலீஸ் ஸ்டேஷனுக்குப் போவதைவிட ஏட்டையாவிடம் போய் விஷயத்தைக் கூறுவதையே விரும்பினான் அவன். டூட்டியிலிருந்து திரும்பி வந்த ஏழுமலை உணவை முடித்துக் கொண்டு அப்போதுதான் படுக்க ஆயத்தம் செய்து கொண்டிருந்தார். கதவு தட்டப்படவே திறந்தவர், அங்கு பாலுவைக் கண்டதும் அவர் கண்கள் வியப்பினால் மலர்ந்தன.

''என்ன தம்பி, இந்த நேரத்திலே?'' என்றார் ஏட். ஓடிவந்த வேகத்தில் மூச்சு வாங்கிற்று பாலுவுக்கு. அவரிடம் அன்று மாலை சொல்லாமல் மறைத்த விவரங்களையும் கூறிய பாலு ''ராத்திரி அவனுக்கு நான் உணவுடன் அந்தப் பாழும் பங்களாவுக்குப் போனேன் சார். ஆனா கந்தன் அங்கு இல்லை. அது மட்டுமில்லே, தரையில் படிந்திருந்த புழுதியில் ''அபாயம் — கந்தன்'' என்று எழுதி இருக்கிறது. அதைக் கந்தன் தான் எனக்கு அறிவிக்க எழுதி இருக்க வேண்டும். நீங்க உடனே ஏதாவது செய்து கந்தனைக் காப்பாத்தணும்'' என்றான்.

''தம்பி நீ சாயந்திரமே இதை என் கிட்டே சொல்லி இருந்தா கந்தனுக்கு இப்படியொரு அபாயமில்லாம காப்பாத்தி இருக்கலாமில்லையா? இப்போ நீ பெரிய சிக்கலிலே மாட்டிக்கிட்டயே?ம். சரி. கிளம்பு போவோம்'' என்று சட்டையை மாட்டிக் கொண்டு கிளம்பினார் ஏழுமலை.

ஏட்டையாவுடன் பாலு மறுபடி அந்தப் பாழடைந்த பங்களாவுக்கு வந்த போது அது அமைதியிலாழ்ந்திருந்தது. பாலு டார்ச் விளக்கொளியில் வழி காட்டிக் கொண்டு உள்ளே புகுந்தான். ஏழுமலை பின் தொடர்ந்தார்.

''இங்கேதான் ஏட்டு சார்... இதோ இந்த இடத்தில்தான் தரையில்'' என்று டார்ச்சை இங்கும் அங்கும் அடித்தபடி அதைத் தேடினான். அவன் குரலில்



அவ நம்பிக்கையும் பரபரப்பும் கலந்திருந்தன. தரையில் எழுதியிருந்த அபாய அறிவிப்பு எழுத்தைக் காணவில்லை. பாலுவின் தவிப்பைக் கண்ட ஏட் ''என்ன தம்பி? மர்மக் கதையெல்லாம் நிறையப் படிப்பே போலிருக்குதே!'' என்றார் ஏளனமுடன்.

''சத்தியமாச் சொல்றேன் சார். இங்கே, இதோ இங்கேதான் சார், தரையிலே எழுதி இருந்தது. யாரோ அதை வேணுமின்னே அழிச்சிருக்காங்க. இதோ பாத்தீங்களா... அங்கே புழுதி ஒரே சீரா இருக்கு. இங்கே கலங்கி இருக்கில்லேயா?'' என்று தான் பொய் சொல்லவில்லை என்பதை ருஜுப் படுத்தும் தவிப்போடு பேசினான் பாலு.

அதே சமயம் ஏதோ ஒரு சத்தம். முக்கி முனகும் ஒலி, மூச்சுத் திணறலுடன் அவஸ்தைப் படுபவரின் திணறல் —கேட்டது. உன்னிப்பாக அதை உற்றுக் கேட்ட ஏட்டையா ''அதென்னது... ஒனக்குக் கேக்குதா தம்பி?'' என்றார்.

''ஆமாம் சார், யாருக்கோ ஏதோ ஆபத்து. உதவி வேண்டி ஒலி கொடுக்கிறார்கள் பேச முடியாத நிலையில்'' டார்ச் விளக்கை சுழற்றி வீசியபடி ஒலி வந்த திசை நோக்கி ஓடினான் பாலு. ஏட்டும் பின் தொடர்ந்தார். அங்கு ஓரிடத்தில் தரையில் மூட்டை போலக் கட்டுண்டு கிடந்தான் மாணிக்கம். அவன் கைகள் இரண்டையும் பின்னுக்கு முறுக்கிச் சேர்த்து உடலைச் சுற்றிக் கட்டப்பட்டிருந்தது. ஒரு கட்டு, அவனைக் கூச்சல் போட முடியாதபடி திறந்த வாயில் பற்களுக்கிடையே பதிந்திருந்தது.



''மாணிக்கம்ணு....! கந்தனுடைய மாமா... இவரை யார் இப்படிக் கட்டி போட்டாங்க'' டார்ச் அவன் மீது ஒளி பாயும்படி நின்றான் பாலு. ஏட்டு ஏழுமலை குனிந்து மாணிக்கத்தின் கட்டுக்களைத் தளர்த்துவதில் ஈடுபட்டிருந்தார் அப்போது...

''சார்... சார்...!'' பீதியுடன் கூவினான் பாலு. ''அதென்னது? உங்களுக்குத் தெரியல்லே ஏதோ எரியற வாசனை - புகை... நெருப்பு சார்!'' கலவரமுடன் கத்தினான் பாலு.

ஏட் ஏழுமலை நிமிர்ந்து பார்த்தார். எதிரில் உள்ள ஹாலிலிருந்து திகுதிகுவென்று தீ ஜ்வாலைக் கொழுந்துகள் நர்த்தனமாடியபடி சிரித்துக் கொண்டிருந்தன.

''தம்பி... இந்த பங்களாவிலே எங்கோ தீ பிடிச்சு வேகமாய்ப் பரவிக்கிட்டு வரது... இந்த மனுஷனை வெளியே கொண்டு போகணும். இவனுக்கு நினைவு இல்லே. கொஞ்சம் இப்படிப் புடி பாக்கலாம்'' என்றார் ஏட்.

ஆனால் பாலுவின் எண்ணமெல்லாம் கந்தனாக இருந்தது. ''கந்தன் என்ன ஆவான் சார், அவன்...? அவனும் இதோ பங்களாவிலேதான் எங்கேயோ இருக்கணும். அவனுக்கு ஆபத்து சார். அவனைக் காப்பாத்தியாகணும்'' என்று ஓடலானான். தீ ஜ்வாலையின் வெளிச்சத்தில் அந்த ஹாலின் கோடியில் ஒரு மாடிப் படி இருப்பது தெரிந்தது. அதை நோக்கி ஓடினான் அவன்.

''தம்பி தம்பி — பாலு — மேலே போகாதே... இது பழங்காலத்துக் கட்டடம். ஏய்...! முரட்டுப் பையனா இருக்கியே. வீணா ஆபத்திலே சிக்கிக்காதே வந்துடு'' கத்தினார் ஏட். ஆனால் பாலு நிற்கவில்லை. நிதானிக்கவில்லை. திரும்பவில்லை. ''கந்தா கந்தா'' என்று கூவிக் கொண்டே மாடிப் படிகளில் ஏறி ஓடினான். மாடியிலுள்ள ஒவ்வொரு அறையினுள்ளும் புகுந்து தேடினான்.

''இங்கு இல்லே... இங்குமில்லே... இங்கேயுமில்லேயே... ஐயோ கந்தா! உனக்கென்ன ஆபத்து'' என்று பரிதாபமாகக் கூவியபடி பைத்தியம் போல இங்கும் அங்கும் ஓடினான். புகை கண்களையும் நெஞ்சையும் கரிக்கச் செய்தது. கமறல் எடுத்தது. இருமினான். மூச்சுவிட முடியாமல் திணறினான். புகை மூட்டத்திலும், அனல் காந்தலிலும் அல்லல் பட்டபடி பாலு கந்தனைத் தேடிக் கொண்டிருந்த போது, ஏட் தான் ஒருவராகவே மாணிக்கத்தை வெளியே தூக்கி போய் ஒரு மரத்துடன் கட்டிப் போட்டு

விட்டு அவரும் உள்ளே விரைந்தார். அவரது நோக்கம், ஆபீஸர் வீட்டுப் பையன் பாலுவைக் காப்பாற்ற வேண்டுமென்பதுதான். அதே மாடிப் படிகளில் ஏறி அவர் மேலே போவ தற்குள் கீழ்ப்பகுதியில் தீ பயங்கரமாகப் பரவி எல்லாவற்றையும் கபளீகரம் செய்து கொண்டிருந்தது.

பாலுவின் தவிப்பும் தேடலும் வீண் போகவில்லை. ஒரு அறைக்குள்ளிருந்து ''உதவி — உதவி'' என்ற குரல் கேட்டது. அதை நோக்கி ஓடினான் பாலு. அதே சமயத்தில் ஏட்டும் அங்கே வந்து விட்டார். அந்த அறையின் கதவு உட்புறமாகத் தாளிடப்பட்டிருந்தது. பாலு அதை மூர்க்கமாகத் தட்டிக் கொண்டிருந்தான். ''கதவைத் திறவுங்களேன் இந்த வீடு முழுதும் தீப்பிடித்து எரிந்து கொண்டிருக்கிறது'' என்று கத்தினான் கமறும் குரலில். ஏட்டையாவைக் கண் கண்டதும் ''சார் — சார்! கந்தனின் குரலைச் சற்று முன்பு இந்த அறைக்குள்ளிருந்து கேட்டேன். ஆனால் கதவு பூட்டி இருக்கிறது'' என்ற போது அவன் அழுதே விடுவான் போலிருந்தது.

ஏட் ஏழுமலை தன் சட்டையைக் கழற்றி வலக் கையை மூடிச் சுற்றிக் கொண்டார். ''தம்பி நீ இப்படி ஒதுங்கி நில்லு. இந்தக் கதவு மேலே மோதி இதை உடைத்துத்தான் திறந்தாகணும். கட்டடத்திலே தீ வேகமாகப் பரவிக்கிட்டு வருது'' என்றபடி அந்தக் கதவின் மீது வேகமாக ஓடிப் போய் மோதுவதற்குத் தயாரானார். பாலு ஒதுங்கிக் கொண்டான்.

மூன்றாவது மோதலில கதவு முறிந்து உள்புறமாக விழுந்தது. உள்ளே ஒரு மேஜையின் முன்னால் ஒருவர் உட்கார்ந்திருந்தார். ஒரு நாற்காலியோடு சேர்த்துக் கயிற்றினால் கட்டப் பட்டிருந்தான் கந்தன். மேஜை மீது க்ரீம் கிராக்கர் பிஸ்கட் அளவில் வரிசையாக அடுக்கப் பட்டிருந்த தங்கக் கட்டிகள் பளபளத்துக் கொண்டிருந்தன. உள்ளே நுழைந்த ஏட்டைக் கண்ட அந்த மனிதர், ''நீ போலீஸ் ஹெட் கான்ஸ்டபிளில்லே?'' என்று கேட்டார்.

''ஆமாம்... என்னை உங்களுக்கு எப்படித் தெரியும், நீங்க யாரு — இந்த பையனை ஏன் இப்படிக் கட்டிப் போட்டிருக்கீங்க!.''

''நீ கேக்கும் வேகத்துக்கு என்னாலே பதில் சொல்ல முடியாது. . நான் எதிர் பார்த்தது வேறே ஆளை. மேலே ஒருத்தனைக் கட்டிப் போட்டிருக்கேன். அவனுடைய கூட்டாளியைத்தான் இங்கே எதிர் பார்த்தேன்... ஆனா நீ வந்ததும் நல்லதாப் போச்சு...'' என்றவரிடம் ஏழுமலை இடை மறித்தார். இதற்குள் பாலு கந்தனின் கட்டுக்களை அவிழ்க்கப் போனான்.



பூங்கா நகர் லியோ கிளப் (Leo Club of Park Town) என்றதோர் அமைப்பு அக்டோபர் மூன்
தேதியன்று டாக்டர் எம். எஸ். ஏகாம்பரம் (Dt. Governor, Lions International) அவர்களால்
துவக்கி வைக்கப்பட்டது. இச்சங்கத்துடன் Leo Club of Down Town என்னும் அமைப்பும் துவக்கி
வைக்கப் பட்டது. இவ்விரு சங்கங்களும் நந்தம்பாக்கம் அரிமா சங்கத்தால் ஆரம்பித்து வைக்கப்பட்டன.
மக்களுக்குச் சுகாதார முறைகளைப் புகட்டுவதும், தெருக்களைச் சுத்தமாக வைத்துக் கொள்வதும், கல்வியறி
வின்மையை அகற்றுவதும் இச்சங்கத்தின் பணிகளுள் சிலவாகும் என பூங்கா நகர் லியோ கிளப் தலைவ
திரு. பி. எஸ். ஸ்ரீதர் தெரிவித்தார். மேலேயுள்ள படத்தில் நந்தம்பாக்கம் அரிமா சங்கத் தலைவர் திரு
வி. அனந்தராமனுடன் பூங்கா நகர் லியோ கிளப் உறுப்பினர்கள் அமர்ந்திருக்கின்றனர்.



விளையும் பயிர்

'கர்நாடக சங்கீதத்துக்கு வளமான வருங்காலம் இந்த விளையும் பயிரினால் உருவாக இருக்கிறது' என்று நீதிபதியே (திரு. கோகுல கிருஷ்ணன்) வாழ்த்தினாரென்றால் அந்தப் பயிரின் வளம் பற்றி ஐயப்பாட்டுக்கு இடமேது? மேலே நீங்கள் காணும் கம்பீரமான சிறுவனுக்கு பத்தே வயதுதானாகிறது. ஆனாலும் பெரிய பெரிய — நந்திகேஸ்வரர்களெல்லாம் பலே பலே என்று பாராட்டும் வகையில் மிருதங்கம் வாசிக்கிறான். சிறுவன் பெயர் மாஸ்டர் சுரேஷ் குமார். இந்த வளரும் பயிரின் குரு மிருதங்க வித்வான் ஆதனூர் பி. ஹரிதாஸ். ஹரிதாஸின் குருவோ, மாங்குடி துரைராஜ அய்யர். குருவின் குருவே இப்பாலகனின் திறமையைப் பாராட்டினாரென்றால் பாருங்களேன்! சுகமான வாசிப்பு. விரல்கள் சுத்தமாக விழுகின்றன. சபைக் கூச்சம் இல்லை. வளரும் பயிரின் வளமான வருங்காலத்துக்கு இதைவிட வேறு என்ன வேண்டும்? சுரேஷ் குமார் கர்னாடக சங்கீத உலகில் ஒளிவிடக் கூடிய நாள் வெகு தூரத்தில் இல்லை. வாழ்க சுரேஷ் குமார். வளர்க அவன் கலை.

''தம்பி என் உத்திரவில்லாமே ஏன் அவன் கட்டுக்களை அவிழ்க்கப் போறே'' என்று கடிந்து கொண்டார். உடனே ஏட் ''சார், எனக்கு எல்லாமே ஒரே மர்மமாக இருக்கு. எது எப்படியானாலும் இந்தக் கட்டிடம் தீப் பிடிச்சுக்கிட்டுது. வேகமாக பரவிக்கிட்டு வருது. நாம் எல்லாருமே இங்கிருந்து தப்பியாகணும்'' என்றார்.

''தீயா... நிஜமாவா... அடேடே. இதுவும் அந்தப்பய வேலைதான். ம்— சரி. ஹெட் கான்ஸ்டபிள், நான் யார் என்பதை மாத்திரம் சொல்லிடறேன். பிரபல கடத்தல்காரர்களை வளைத்துப் பிடிக்கும் விசேஷ போலீஸ் படையின் அதிகாரிகளுள் ஒருவன் நான். இந்தப் பாழடைந்த பங்களா கள்ளக் கடத்தல் காரியத்துக்குப் பயன்படும் கேந்திரமா இருந்து வருவதை அறிந்து கடத்தல் காரர்களை வேட்டையாட வந்தேன்... சரி, சரி... இதோ இந்தப் பைக்குள் தங்கக் கட்டிகளை அள்ளிப் போடு. நாம் வெளியேறலாம்'' என்று பரபரத்தார்.

''மாடிப்படி வழியா இறங்கி வெளியேற முடியாதுங்க... கீழேயெல்லாம் பயங்கரமாத் தீ பரவிட்டுது' என்ற ஏட் ஜன்னல் வழியாக எட்டிப் பார்த்தார். ''நல்ல வேளை இதோ இந்த ஜன்னல்கிட்டே ஒரு வேப்பமரம் தழைஞ்சிருக்கு. நாம் இது வழியாத்தான் கீழே இறங்கியாகணும். தம்பி பாலு'' என்று கூப்பிட்டார். இதற்குள் கந்தனை விடுதலை செய்திருந்தான் பாலு. மூலையில் பதுங்கியிருந்த பூனைக்குட்டி மியாவ் என்று குரல் கொடுத்தபடி கந்தனின் காலடியில் வந்து உராய்ந்து கொண்டு நின்றது.

''உன்னை விட்டுட்டுப் போக மாட்டேன், கவலைப் படாதே'' என்று அதைத் தூக்கி அணைத்துக் கொண்டான் கந்தன்.

ஏழுமலை பாலுவை ஜன்னல் வழியே வேப்ப மரத்துக்குத்தாவி அதன்வழியே கீழே இறங்க முடியுமா என்று கேட்டார்

''நீங்க கவலைப் படாதீங்க சார். நான் மட்டுமில்லே, கந்தனையும் கூட

நான் பத்திரமா கீழே கொண்டு போய்ச் சேர்த்துடறேன்'' என்று கூறியபடி பாலு வெகுலாகவமாக வேப்ப மரத்தில் தொத்திக் கொண்டான். கந்தனுக்கும் தன்னோடு இறங்க உதவினான். ஏட்டும் அந்த அதிகாரியும் தங்கக் கட்டிகளுடன் அதே மரத்தின் வழியாகக் கீழே இறங்கினார்கள்.

இதற்குள் அக்கம் பக்கத்துக் கிராமத்திலுள்ளவர்கள் சொக்கப்பனைபோலத் தீ எரியும் வெளிச்சம் கண்டு அதை அணைப்பதற்கு வந்து கூடினார்கள். வேறு சிலர் ஓடிப்போய் தீ அணைக்கும் என்ஜினுடன் வந்திருந்தார்கள். அந்தப் பெரிய தீயை அணைப்பதில் அத்தனை பேரும் மும்முரமாக ஈடுபட்டிருந்த போது ஏட்டிடம் கடத்தல் வேட்டையாட வந்த அதிகாரி விளக்கிக் கொண்டிருந்தார். இப்போது மாணிக்கத்துக்கு நினைவு திரும்பி இருந்தது... அவனைச் சுட்டிக் காட்டி ''இந்த மனிதனும் இன்னொருவனும் வெளி நாட்டி லிருந்து கடத்தி வரப்படும் பொருள்களை வாங்கி அதைக் குறிப்பிட்ட நபர்களுக்கு ஒப்படைக்கும் காரியத்தை இந்தப் பாழடைந்த வீட்டைக் கேந்திரமாக வைத்துக் கொண்டு செய்கிறார்கள் என்று எங்களுக்குத் தகவல் வந்தது. நான் மாறு வேஷத்தில் இந்த மாணிக்கத்தைக் கண்காணித்தேன். இவனுடன் இந்தப் பையனையும் பார்த்திருக்கிறேன். இவர்களுடைய காரியத்துக்கு இந்தப் பையனும் உதவி செய்கிறவன் என்ற முடிவோடு தான் இந்த நிமிஷம் வரை நான் இருந்து வந்தேன். அதனால் தான் இந்த வீட்டில் பதுங்கி இருந்த இவனைக் கண்டதும் கட்டிப் போட்டேன். இங்கு பதுக்கப் பட்டிருந்த தங்கக் கட்டிகளை முன்பே கைப்பற்றி விட்டேன். இதை அப்புறப்படுத்த மாணிக்கமும் அவன் கூட்டாளியும் வருவார்கள். அப்போது அவர்களையும் மடக்கிப் போடவே மறைந்திருந்தேன். எதிர்பார்த்தபடியே மாணிக்கம் வந்தான். அதற்கு முன்பே நான்இந்தப் பையனைக் கட்டிப் போட்டு விட் டேன்.''

இப்போது பாலு இடையிலே பேசினான். ''அப்போ மாணிக்கம் என்னைப் பின் தொடர்ந்தது தற் செயலாக நிகழ்ந்ததுதானா? தங்கக் கட்டிகளை இங்கிருந்து எடுத்துப் போய் விநியோகிக்கத்தானா இங்கு வந்திருக்கிறான்?''

''ஆமாம்... மாணிக்கத்தைக் கட்டிப் போட்டு விட்டு அவன் கூட்டாளியின் வருகையை எதிர்பார்த்துக் காத்திருந்த போதுதான் நீங்கள் வந்தீர்கள். ஆனால் கூட்டாளி தப்பி விட்டான். இந்த வீட்டுக்குத் தீ வைத்தது அவனாகத்தானிருக்க வேண்டும். மாணிக்கம் சிக்கி விட்டதை எப்படியோ அறிந்து கொண்டு விட்ட அவன் இந்த வீட்டுக்கே தீ வைத்து எல்லாவற்றையும் அழிக்க முனைந்திருக்கிறான்'' என்று பேசிக் கொண்டே வந்தவர் தூரத்தில் தீயின் ஒளியில் கூட்டத்தில் யாரையோ பார்த்து விட்டு... ''அதோ, அதோ! நான் நினைத்தபடியே மாணிக்கத்தின் கூட்டாளி நிற்கிறான்'' என்று மின்னலென ஓடினார். அதே சமயத்தில் தீயைத் தீவிரமாக அணைப்பதில் ஈடுபட்டிருந்த கூட்டத்தில் வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த ஒரு மனிதன் தன்னை நோக்கி ஓடிவரும் போலீஸ் அதிகாரியைப் பார்த்து விட்டு தலை தெறிக்க ஓடினான். ஆனால் அவன் துரதிர்ஷ்டம் தீயணைக்கும் படையினர், தண்ணீர்க் குழாய் டியூப்பை எதேச்சையாக இழுக்கவே அவன் அதில் கால் இடறித் தலை குப்புறக் கீழே கவிழ்ந்தான். அது போதுமே கடத்தல் வேட்டை அதிகாரிக்கு. அவனைக் கோழிக் குஞ்சைக் குள்ளநரி அமுக்குவது போல அமுக்கி விட்டார்.

அவனைக் கண்ட ''கந்தன் இந்த மனிதரை நான் என் மாமாவுடன் அடிக்கடி பார்த்திருக்கிறேனே'' என்றான்.

''தம்பி நீ ஆரம்பத்திலேயே என்னிடம் பூரா உண்மையையும் சொல்லாதது தப்பு. ஆனாலும் இந்தக் கடத்தல் காரங்களைப் பிடிக்கிறதுக்கு உன் செயல் பயன் பட்டதினாலே உன்னை மன்னிச்சுட வேண்டியதுதான்'' என்றார் ஏட்டு ஏழுமலை.

பாலுவின் சாகஸம் பற்றி அந்த ஊரில் பேசாதவர்கள் இல்லை. போலீஸ் இலாகாவே அவன் தைரியத்தையும் துணிச்சலையும் சமயோசிதப் புத்தியையும் பாராட்டிக் கௌரவித்தது. கான்வென்டில் அவனை ஹீரோவாக்கி விட்டார்கள்.

கந்தன்...

அவன் துன்பம் அகன்றது. மாணிக்கம் சிறைச்சாலை வாசியாகவே அவன் மறுபடியும் அநாதையானான். ஆனால் அவனுக்கு வாழ்வளிக்கும் முயற்சியைப் பாலுவின் அப்பா மேற் கொண்டார். படிக்க வேண்டுமென்ற ஆர்வமுள்ள அவனை ஒரு கருணை இல்லத்துக்குச் சிபாரிசு செய்து சேர்த்து விட்டார். இப்போது அவன் பசிக்கு வயிரார உணவும் அறிவுக்குப் படிப்பும் கிடைத்து வருகின்றன. பாலுவை அவன் மறக்கவே இல்லை. மறக்கவும் மாட்டான். அடிக்கடி பாலுவும் கந்தனும் சந்தித்துக் கொள்ளுவார்கள். (முற்றும்)

விந்தை உலகம்


ஆஷி

முட்டைக்குள் இருக்கும் குஞ்சுக்கே ஒலியை உணரும் சக்தி உண்டு! சோவியத் விஞ்ஞானி மன்தேய் பெல் என்பவர், குஞ்சு வெளிவருவதற்கு இரண்டு நாட்கள் இருக்கும் போது, ஈமு பறவை முட்டைகளின் அருகில் இருந்து அந்தப் பறவையைப்போல் குரல் கொடுத்தார். உடனே அந்த முட்டைகள் அங்குமிங்கும் உருண்டு ஓடின!







பெரிய எரிமலைகள் வெடிப்பதால் பருவகாலங்கள் பாதிக்கப் படுவதுண்டு. எரிமலைகளிலிருந்து வெளிவரும் புகை மண்டலங்களால் சூரிய வெப்பம் சரியாக நிலத்தை அடைய முடிவதில்லை. இவ்வாறு 1816-ஆம் ஆண்டு எரிமலைகள் வெடித்ததால் அமெரிக்காவில் கோடை காலமே இல்லாமல் போய்விட்டது!



பறவைகளின் கண்கள் விசித்திரமானவை. தன் குஞ்சுக்கு இரை கொடுக்கும் ஒரு பறவையின் கண்களுக்குக் குஞ்சின் வாய்மட்டுமே தெரியும்! முழு உருவமும் தெரியாது! செடியில் உள்ள புழுவைப்பார்க்கும் போது புழுமட்டுமே தெரியும்! செடி தெரியாது! இது உண்மைதான் என்கிறார் பிரிட்டிஷ் பிராணியியலறிஞர் டேவிட் லாக் என்பவர்!

கடலில், ஜெல்லிமீன் என்னும் ஒருவகை மீன், நுட்பமான ஒலியை உணரக்கூடிய தன்னுடைய ஓர் உறுப்பால், புயல் வருவதை முன் கூட்டியே உணர்ந்து விடுகிறது! அந்த மீனை வைத்து மாஸ்கோ விஞ்ஞானிகள், புயல் வருவதை 15 மணிக்கு முன்பே அறிவிக்கக் கூடிய கருவி ஒன்றைக் கண்டு பிடித்திருக்கிறார்கள்!





ஸ்ரீ லங்காவில் 'ருவான் வெலிசாயா' புத்தர் ஆலயம் என்று ஓர் ஆலயம் இருக்கிறது. இந்த ஆலயத்திற்கு உள்பக்கம் என்று ஒன்று கிடையாது! 300 அடி குறுக்களவும் மூடப்பட்டுதான் இருக்கிறது! எல்லோரும் இந்தத் தோற்றத்தையேதான் வணங்குகிறார்கள். சிங்களத்து மன்னன் 'துட்டகம்னு' என்பவனால் கட்டப்பட்டது இந்த ஆலயம். இந்த மாதிரி ஆலயம் உலகில் வேறு எங்கும் கிடையாது!

தீபாவளிப் பரிசு

தீபாவளிப் பரிசாக ரகுவுக்கு ஒரு 'சிடிசன்' கடிகாரம் கொடுத்திருந்தார் அவன் தந்தை. அதை அவனிடமே கொடுத்துப் பெட்டியில் வைக்கச் சொல்லி, தீபாவளியிலிருந்து அதைக் கட்டிக் கொள்ளச் சொல்லியிருந்தார். ரகுவுக்கு மகிழ்ச்சி பிடிபடவில்லை. கடிகாரத்தை அடிக்கடி எடுத்துப் பார்ப்பதும், அதைத் தன் அம்மாவிடமும், நண்பர்களிடமும் காட்டிப் பெருமை பேசுவதிலுமாகப் பெரும் பகுதி நேரத்தைச் செலவிட்டான்.

''டேய்....! தீபாவளியிலிருந்துதான் கடிகாரத்தைக் கட்டிக்கணும். இன்னும் ஒருவாரம்தான் இருக்கு. அதுக்குள்ளே அதை எடுக்கறதும், வைக்கிறதுமாக இருந்து தொலைச்சுடாதே...! இருநூறு ரூபாய் கடிகாரம் அது! அதைத் தொலைச்சுட்டு நின்னியோ முதுகுத் தோலை உரிச்சுடுவார் உன் அப்பா!'' என்று எச்சரித்தாள் தாய்.

''இல்லையம்மா! இனிமே எடுக்கல்லே! பெட்டியில் வைச்சுப் பூட்டிடறேன்'' என்று சொல்லி, பூட்டிவிட்டு சாவியைத் தன் சட்டைப் பாக்கெட்டில் வைத்துக்கொண்டான். தீபாவளிக்கு இரண்டு நாள் முன்பு. ரகு தன் நண்பர்களுடன் பகல் காட்சி சினிமா பார்க்கப் புறப்பட்டான். தந்தை வெளியூர் போயிருந்தார். அம்மாவிடம் கெஞ்சிக் கொஞ்சிப் பணம் வாங்கிக் கொண்டு, அம்மாவுக்குத்தெரியாமல் கடிகாரத்தை எடுத்துத் தன் நிஜார் பையில் வைத்துக் கொண்டு புறப்பட்டான்.



திருநாகேசுவரம் ரயில்வே காலனியிலிருந்தது அவன் வீடு. ஏதாவது புது சினிமா பார்ப்பதென்றால், ரயிலில் ஏறிப் பக்கத்து டவுனான கும்பகோணம் சென்றுதான் படம் பார்ப்பான் ரகு. இப்போதும் அப்படித்தான், நண்பர்களுடன் கும்பகோணம் புறப்பட்டான்.

ரயிலில் அமர்ந்த பிறகுதான் தன் கடிகாரத்தைக் கையில் கட்டிக் கொண்டான் ரகு. பச்சை டயல்வைத்த கடிகாரம் அது. அவன் சிவந்த கைக்கு எடுப்பாக இருந்தது. ''ஜோராயிருக்குடா ரகு...!'' என்று நண்பர்கள் புகழ்ந்தார்கள். ரகு மகிழ்ச்சியோடு கையையும்—கடிகாரத்தையும் மாறி மாறிப் பார்த்துக் கொண்டிருந்தான்.

சினிமா பார்த்த பிறகு ரயிலில் நண்பர்களுடன் வீடு திரும்பிக் கொண்டிருந்தான் ரகு. அவர்கள் பெட்டிக்கு காலிழந்த ஒருவர் அக்குளில் கட்டையை வைத்துக் கொண்டு, 'டக் டக்'கென்று நடந்து வந்து எதிர் ஸீட்டில் அமர்ந்தார். அவரைப் பார்த்த ரகு கைகொட்டிச் சிரித்தான். ''கோபு சினிமாவிலும் இப்படி ஒரு நொண்டி வில்லனை இப்போது தானே பார்த்தோம்...!'' என்று அவன் சொன்னபோது, சிறுவர்கள் 'ஹோ'வென்று ஆர்ப்பரித்தார்கள். அடிக்கடி திரையில் வந்த நொண்டி வில்லனைப் பற்றிக் கேலியாகப் பேசிப் பேசி எதிரேயிருந்தவரின் மனம் நோகப் பண்ணிக் கொண்டு வந்தான் ரகு. ஆனால், அந்த மனிதர் ஏதும் சினம் கொள்ளாமல், இவர்களின் பேச்சைப் புன்முறுவலுடன் கேட்டு ரசித்துக் கொண்டிருந்தார்.

வண்டி திருநாகேசுவரம் ஸ்டேஷனில் நின்றதும், சிறுவர்கள் 'ஹோ' என்று மகிழ்ச்சி ஆரவாரத்துடன் கீழேயிறங்கி ஓடினார்கள். வீட்டுக்கு வந்த பிறகு தன் கையைப் பார்த்த ரகு திடுக்கிட்டான். ஆம்! அவன் கையை அலங்கரித்த அந்த 'சிடிசன்' பச்சை நிறக் கடிகாரத்தைக் காணவில்லை. ஐய்யோ! கடிகாரம் எங்கே எப்படிப் போச்சு...? நாளைக்கு தீபாவளியாச்சே...! ஊருக்குப் போன அப்பா திரும்பி வந்துடுவாரே! கடிகாரத்தை எடுத்துக் கட்டிக்கச் சொன்னால் என்ன

செய்வேன்...? சினிமாத்தியேட்டரிலோ வீதியிலோ, ரயிலிலோ எங்கேயோ கீழே விழுந்துடுத்தே...! முருகா! என்ன பண்ணுவேன், என்ன பண்ணுவேன்..? என்று கண் கலங்கினான். இரவு முழுதும் தூக்கம் பிடிக்காமல் இப்படியும், அப்படியுமாகப் புரண்டு கொண்டிருந்தான்.

மறுநாள் தீபாவளியை உற்சாகத்தோடு வரவேற்க வேண்டியவன், சோகத்தோடு வரவேற்றான். 'அப்பா கிட்டே இன்னிக்கி தீபாவளிப் பரிசா உதைதான் படப்போறேன்...! அப்பாவோட கோபத்துக்கு ஆளாறதைக் காட்டிலும், விட்டை விட்டே ஓடிட்டா என்ன...?'' என்று யோசித்தான்.

அவன் யோசிக்கும் நேரத்தில், கூடத்து அறையிலிருந்து அவன் தந்தையும், ரயிலில் அவன் கேலி பேசிய அந்தக் காலிழந்த மனிதரும் வருவதைக் கண்டான். அவனுக்கு அவரைப் பார்க்கப் பயமாயிருந்தது! கிட்ட வந்த தந்தை ''என்னடா..! என்னவோ மாதிரியிருக்கே...! இந்த மாமா என் கிளாஸ்மெட்! இவரோட பேசிண்டிரு; நான் மார்க்கெட் வரை போய் வரேன்'' என்று சொல்லிக் கிளம்பினார் அவன் தந்தை. அம்மா அடுக்களையில்புகுந்து விட்டாள்.

பயந்து கொண்டே அவர் அருகில் சென்றவன் ''மாமா! நான் அறியாமல் உங்களைக் கேலி பேசினதை அப்பாகிட்டே சொல்லிடாதீங்க..'' என்று கெஞ்சினான்.

''இல்லேடா கண்ணு! உன்னேயே இங்கே நான் சந்திப்பேன்னு நெனைச்சுக் கூடப் பார்க்கல்லே..! இனிமே நீ யாரையும் கேலியாப் பேசக் கூடாது தெரியுமா...?'' என்றார்.

''இல்லே'' என்று தலையசைத்தான் ரகு.

''நீ ரயிலில் அடிக்கடி கையைத் தட்டிப் பேசிக் கொண்டிருந்தபோதும் ரயில் நின்னவுடனே 'ஹோ'ன்னு சத்தம் போட்டுண்டு கீழே இறங்கி ஓடினபோதும், கடிகாரச் சங்கிலி தளர்ந்து கீழே விழுந்து விட்டதை நீ கவனிக்கவேயில்லே. இதை எடுத்துண்டு இந்த ஊர் ஸ்டேஷன் மாஸ்டர் கிட்டே கொடுக்கலாம்னு கீழே இறங்கினேன். எதிர்பாராமே உன் அப்பா என் கண்ணில் பட்டு விட்டார். என் பெட்டியைக் கீழே இறக்கி வைத்து, வீட்டுக்கு வந்துவிட்டுத்தான் போகணும்னு பிடிவாதம் பிடிச்சார். உன் அப்பாவைப் பார்த்தவுடனே இந்தக் கடிகாரம் சமாசாரமே எனக்கு மறந்து போயிடுத்து. இந்தா இப்போ தீபாவளிப் பரிசா நீ தொலைச்ச கடிகாரத்தை உன்னிடமே கொடுக்கிறேன் என்று சொல்லி வாட்சை அவன் கையில் கட்டி விட்டார் அவர்.

ரகுவுக்கு மகிழ்ச்சி பிடிபடவேயில்லே. அந்த மனிதர் அவனுக்கு தெய்வமாகவே தோன்றினார். ஆகா..! அப்பா அவனுக்கு அந்தக் கடிகாரத்தை வாங்கிக் கொடுத்தபோது இருந்த மகிழ்ச்சியைவிட, இப்போ இவர் தொலைந்து போனதை எடுத்துக் கொடுத்த போது இரட்டிப்பு மகிழ்ச்சியாக இருந்தது. தீபாவளி மத்தாப் புக்களின் ஒளியில் பச்சை நிற 'சிடிசன்' கடிகாரம் அவன் கையில் மினு மினுத்தது.



இங்கு இருப்பவர் ஐவரும் சமீப காலத்தில் பத்திரிகைகளில் பிரபலமாக அடிப்பட்டவர்கள். இவர்களில் எத்தனை பேரை உங்களால் சரியாகக் கண்டுபிடிக்க முடியும்?



1. ஹென்றி கிஸ்ஸிங்கர், அமெரிக்கா (Henry Kissinger)
2. ராபர்ட் மல்டூன், நியூ ஸிலாந்து பிரதமர் (Robert Muldoon)
3. ஜிம்மி கார்ட்டர், அமெரிக்க ஜனாதிபதி (Jimmy Carter)
4. அஸத், ஸிரிய ஜனாதிபதி (Assad)
5. ஜேம்ஸ் கல்லகன், பிரிட்டிஷ் பிரதமர் (James Callaghan)

தெரியுமா?

3051 ஸைப்ரஸின் தலைநகர் எது?

3052 ஹிட்லரின் ரகசியப் போலீஸ் படையின் பெயர் என்ன?

3053 இஸ்ரேலின் முன்னாள் பிரதமர் திருமதி கோல்டா மேயர் (Golda Meir) எங்கு பிறந்தவர் தெரியுமா?

3054 ஆர்மோனியம் என்னும் இசைக் கருவியை உருவாக்கித்தந்த நாடு எது?

3055 ஒரே பெயரில் திருக்குறளில் இரண்டு அதிகாரங்கள் உள்ளன. அவை என்ன?

3056 குங்கிலியம் எதிலிருந்து உருவாகிறது?

3057 சுருக்கெழுத்து முறையை வகுத்த முதல் அறிஞர் யார்? அதைப் பிரபலமடையச் செய்தவர் யார்?

3058 சாதருபம், கிளிச்சிறை, ஆடகம், சாம்புநதம் இவையெல்லாம் என்ன?

3059 தபாலாபீசில் தபால் தலை வாங்கி ஒட்டாமலும் விலாசதாரரிடம் பணம் பெறாமலும் தபால் மூலம் தபால் அனுப்ப முடியுமா?

3060 நானும் என் தாத்தாவும் சௌமிய ஆண்டு வைகாசி மாதம் பிறந்தவர்கள். எனக்கும் என் தாத்தாவுக்கும் வயதில் வித்தியாசம் எவ்வளவு?

3061 தரமான குதிரைகளுக்குப் புகழ் பெற்ற நாடு அரேபியா. அதேபோலக் கழுதைகளுக்குப் பெயர் பெற்ற நாடு எது?

3062 கி. மு. 4 முதல் கி. பி. 4 வரை எத்தனை ஆண்டுகள்?

3063 முளரி, ஆர்கலி, முந்நீர் ஆகியவை எதைக் குறிக்கும் வெவ் வேறு சொற்கள்.

3064 ராவணன் மூழி என்பது — ஒரு வகைக் கண் நோய், ஒருவகைக் கோழி, கோழி வகைகளுள் ஒன்று, இலங்கையிலுள்ள அசோக வனத்துக்கு வேறு பெயர் — இவற்றில் எது சரி?

3065 கல்நார் ஒருவகைக் கல்லிலிருந்து கிடைக்கிறது. சரிதானா?

தெரியுமே!

). 3051. நிகோஸியா (Nicosia) 3052. கெஸ்டபோ (Gustapo). 3053. ரஷ்யாவில். 3054. பிரான்ஸ். 3055. 'குறிப்பறிதல்' என்ற அதிகாரம் பொருட்பாலிலும் காமத்துப் பாலிலும் வருகிறது. 3056. மரங்களின் பால்தான் குங்கிலியம். ஆச்சா அல்லது சால விருட்சத்திலிருந்து கிடைக்கும் பாலிலிருந்து குங்கிலியம் தயாரிக்கிறார்கள். 3057. சிறந்த ரோமானியப் பேச்சாளரான சிசரோவின் செயலாளரான மார்க்கஸ் டல்லியஸ் டைரோ என்பவர் கி. மு. 100ல் கண்டு பிடித்தார். நவீன முறைக்கு ஐஸாக் பிட்மென். 3058. பொன்னின் வகைகள். 3059. முடியும். தபால் நிலையத்தில் முன்பணம் கட்டி இந்த ஏற்பாட்டைச் செய்து கொள்ளலாம். இம்முறையில் உறை மீது அவர்கள் அமைத்துத் தரும் யந்திரத்தின் மூலம் தபால் முத்திரையை நாமே தயாரித்துக் கொள்ளலாம். 3060. அறுபது ஆண்டுகள். 3061. முன்பு அபிசீனியா. இப்போது பிரான்ஸ், இத்தாலி, ஸ்பெயின் ஆகிய நாடுகளில் வளர்க்கப் படும் கழுதைகளே சிறந்தவை. 900 ராத்தல் எடையுடைய கழுதைகள் இங்கு காணலாம். 3062. எட்டு ஆண்டுகள். 3063. கடல் என்பது. 3064. கோழி வகைகளுள் ஒன்று 3065. சரி. கால்ஷியம், மக்னீஷியம் ஆகியவற்றின் சிலிகேட்டுக்கள் கல்நார் எனப்படுகிறது.

Printed and published by V. Murali on behalf of Messrs Bharathan Publications Private Ltd., at the Bharathan Press, Guindy, Madras-600032.
Editor: K. R. Athmanathan.
GOKULAM FORTNIGHTLY. GUINDY, MADRAS-600032.

மகா காளேசுவரர் ஆலயம்... அரக்கனின் அழிவு

ரத்னமாலா மலைகளில் தூஷன் என்ற பெயர் கொண்ட பயங்கரமான அரக்கன் ஒருவன் வாழ்ந்து வந்தான். அவன் வேதங்களுக்கும், வேத விற்பன்னர்களுக்கும் கொடிய விரோதி. முனிபுங்கவர்களையும் உத்தமர்களையும் கொல்லுவதே அவன் தொழில்.

உஜ்ஜயினியைச் சேர்ந்த வேதப்பிரியா என்ற பிராமணோத்தமருக்கு நான்கு புதல்வர்கள். இந்நால்வருமே சிவபெருமானிடம் மாறாத பக்தி கொண்டவர்கள். அரக்கன் தூஷன் உஜ்ஜயினியைத் தாக்கித் தன் பெரும் படையுடன் நகரினுள் புகுந்த போது வேதப் பிரியரின் நான்கு புதல்வர்களும் தங்கள் நகரைக் காத்தருளுமாறு சிவபெருமானிடம் வேண்டிக் கொண்டார்கள். தூஷன் பக்தர்களைக் கொல்ல முற்படும் போது, அங்கிருந்த ஒரு குழியிலிருந்து சிவபெருமான் தோன்றி அரக்கனையும் அவன் படை முழுவதையும் சம்ஹாரம் செய்தார்.

மகாகாளேஸ்வரர் ஆலயம், உஜ்ஜயினி நகரில், சிப்ரா நதிக் கரையில், தம் பக்தர்களின் உருக்கமான வேண்டுகோளுக்கிணங்க, அரக்கன் தூஷனை வதைப்பதற்காக எங்கு தோன்றினாரோ அந்த இடத்தில் எழுப்பப் பட்டுள்ளது. தம் பக்தர்களுக்கு அருள் பாலித்து ஆதரிக்க பாரத நாட்டின் பல்வேறு பகுதிகளில் ஆவிர்பவித்துள்ள பன்னிரண்டு ஜோதிர் லிங்க ஸ்தலங்களுள் ஒன்று இது.

आकाशे तारकं लिङ्गं पाताले हाटकेश्वरम्।
मृत्युलोके महाकालं लिङ्गत्रयं नमोऽस्तु ते॥

''வானுலகில் உள்ளது தாரகலிங்கம். பாதாள லோகத்திலிருப்பவர் ஹடகேஸ்வரர். பூமியிலிருப்பவரோ மகா காளேஸ்வரர். இம்மூன்று லிங்கோத்பவ மூர்த்திகளையும் வழிபடுங்கள்.''

